143

பாடோலி

143
1-1-11

06, 3, B
N64
104355

பாடேடாலி

MADRAS RECORD OFFICE
MADRAS

சொல்லியவர்:

வை. கோ.

விற்பனை உரிமை
மெர்க்குரி புத்தகக் கம்பெனி
ராஜ வீதி - கோயமுத்தூர் - 1.

முதற் பதிப்பு: 164
மல்லிகா வெளியீடு: 63 (24)

06, 3 B
31 N63

ARCHIVES
104355
EGMORE, MADRAS

விலை ரூ. 1-00.

புரோகிரசிவ் பிரிண்டர்ஸ்
சென்னை-1.

பதிப்புரை

ஆப்பிரிக்க நாட்டில் வழங்கிய பிரசித்தமான பழைய கதை இது. இந்த நூலைச் சிறுவர் முதல் முதியவர் வரை வயது பாகுபாடின்றிப் படிக்கலாம். கற்பனைகளை, அளவுக்கு மீறிக் கொண்டிருக்கிற இக் கதை பல்நாட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, பாராட்டப்பெற்ற பெருமை பெற்றதாகும்.

பிறநாட்டு நல்ல நூல்களைத் தமிழில் வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம். அழகிய முறையில் மொழி பெயர்த்துத் தந்த ஆசிரியர்க்கு எங்கள் நன்றி.

—பதிப்பாளர்

பிற நூல்கள்

டெம்பாவும் செலிபாவும்

நச்சுமரம்

சிரிக்கும் பேர்வழி

தவளைக்குளம்

யூயானி

பாடோலி

—: o :—

இதை எழுதுகிற நாட்களில் அமாக்சோசாக்கள் இப்போது அவர்கள் வசித்து வரும் இனிமையான, அமைதியான டிரான்ஸ்கி மலைகளில் வசித்து வரவில்லை. அந்த மலை இந்திய மகாசமுத்திரத்தைப் பார்த்துக்கொண்டு நின்றது. அவர்கள் அக்காலத்தில் வடக்கே பெரிய மலைகளுக்கும் காடுகளுக்கும் மத்தியில் வாழ்ந்து வந்தார்கள். அந்த மலைகளிலிருந்துதான் ஜீவ நதிகளும், அருவிகளும், சிற்றருவிகளும் கீழே உள்ள செழிப்பான பள்ளத்தாக்குகளுக்குப் போய்க் கொண்டிருந்தன. இந்த அமாக்சோசாக்கள் என்ற வகுப்பினர் மிகுந்த தைரியசாலிகள் என்ருலும் அமாஜிம்பா என்ற நாசம் செய்யும் நரபட்சிணிகளான கூட்டத்தாருக்கு இவர்கள் ஜோடி அல்ல. அந்த நரபட்சிணிகள் ஏற்கனவே இவர்களுடைய அமைதியுள்ள கிராமங்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்திருந்தார்கள். கடைசியாக அவர்களைத் தெற்கே விரட்டி இப்போது அவர்கள் வசித்து வரும் இடத்திற்கு வரும்படிச் செய்து விட்டார்கள்.

இந்தப் பள்ளத்தாக்குகள் ஒன்றில் ஒரு பெரிய பணக்கார கிராமம் இருந்தது. அதில் மாகென்னு என்று ஒரு சிறு பையன் வசித்து வந்தான். அவனுடைய தகப்பனுர் பெரிய பணக்காரர். அதனுல் அவர் பல மனைவிகளோடும், ஏராளமான ஆடு, மாடு மந்தைகளோடும் இருந்து வந்தார். மாகென்னு சங்கீதத்தில் மிகுந்த பிரியம் உள்ளவன். நடனத்திலும் பாட்டிலும் அவனுக்கு மிகுந்த பிரியமுண்டு. ஆப்ரிக்கர்கள் எல்லோருமே சங்கீதப் பிரியர்களென்ருலும் மாகென்னுவுக்குப் பிடிவாதமான ஆசை ஒன்று இருந்தது. அவன் சிறு பையனுக இருந்தபோது நாட்டியமாடுகிறவரின் தாளத்திற்கு ஒத்த கால் ஆட்டங்களைக் கவனிப்பதைவிட வேறு எதுவும் அவனுக்கு மகிழ்ச்சிகரமாய் இருந்ததில்லை. அவன் பூரண திருப்தியோடு மணிக்கணக்காக அப்படியிருப்பான். அவனுடைய சிறிய கருத்த பெருவிரலை வாயில் வைத்துச் சப்பிட்டுக் கொண்டு அவனுடைய பெரிய பிரகாசமான பழுப்புக் கண்களை அந்த நாட்டியக்காரர்கள் மீது குத்திட்டுப் பார்த்துக் கொண்டு இருப்பான். அந்த ஆட்டமும் தாளமும் அவனுடைய உள்ளத்தில் நுழைகிற வரையில் வேறு எதையுமே கவனிக்கவே மாட்டான்.

அவனுடைய வகுப்பில் சங்கீத வாத்தியங்களை வாசிக்கிற வழக்கம் பெரும்பாலும் பெண்களைச் சார்ந்ததாக இருக்கும். சிறு வயதிலேயே தான் ஒரு சங்கீதக்காரனுக வரவேண்டுமென்று மாகென்னு தீர்மானித்தான். அவன் பார்த்த ஆட்டக்காரர்களைப் போல ஆடவும் பாடவும் வேண்டுமென்றும் அவனுடைய தாயாரின் முதுகில் ஒரு கறுப்புக் கம்பளத்தில் கட்டப்பட்டிருந்த போதே அவன் நினைத்தான்.

அவன் ஒரு சிறந்த பையனுக வளர்ந்தான். அவனுடைய தந்தையின் ஆடு, மாட்டு மந்தைகளை மேய்ப்பதற்கான காலம் அவனுக்கு வந்தது. முதலில் மூத்த சகோதரர்களில் ஒருவரோடு அந்த வித்தையைக் கற்றுக் கொள்வதற்காகப் போய் வந்தான். அந்த ஆடு, மாடுகளை நல்ல விளைச்சல் நிலங்களுக்குப் பந்தோபஸ்தாய் கொண்டு போய்ச் சேர்த்ததும் அந்த மேய்க்கிற பையன்கள் நேரத்தைக் கடத்துவதற்காக விளையாட்டுகள் விளையாடுவது வழக்கமாய் இருந்து வந்தது. சில சமயங்களில்

அவர்கள் விளையாட்டுச் சண்டைகளும் போடுவதுண்டு. ஒரு கிராமத்து மேய்ப்பவர்களும் மற்ெருரு கிராமத்து மேய்ப்பவர்களும் அம்மாதிரி போர் செய்வதுமுண்டு. சில கிராமங்களில் தடிகள் தாங்கி யார் தைரியமானவர், யாருடைய கால் வேகமாக அசைகிறது என்பதை நிர்ணயிப்பதற்காக அவர்கள் சண்டை போடுவதுண்டு. வெயில் அதிகமாக இருக்கிற நாட்களில் அவர்கள் மர நிழல்களில் குத்துச் சண்டைகள் போடுவதுமுண்டு. ஒவ்வொரு நாளும் பறவைகளையும், மயில்களையும், கலைமான்களையும் பந்தயம் வைப்பதுண்டு. அந்தப் பந்தயங்களில் அகப்படுபவைகளை அவர்கள் அங்கே நெருப்பு மூட்டி வாட்டி உண்பதும் உண்டு; அல்லது தங்களது வெற்றியைப் பெற்றோர்களுக்குக் காட்டுவதற்காக வீடுகளுக்கு எடுத்துச் செல்வதுமுண்டு. அந்தப் பந்தயங்கள் வைப்பதில் அவர்கள் மிகுந்த திறமைசாலிகளானார்கள். புதிது புதிதாகப் பந்தயங்களைத் தயார் செய்து ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டார்கள். இவற்றையெல்லாம் மாகென்ன கவனித்துப் படித்துக் கொண்டான். ஆகவே அவர்களுடைய விளையாட்டுகள் எதிலும் அவன் இப்போது அறியாதவனாக இருக்கவில்லை. என்றாலும் அவன் தன்னுடைய சொந்த வாத்தியத்தை வாசிக்கவும், தன்னுடைய சொந்தப் பாட்டுகளைப் பாடவும் ஏங்கி நின்றான்.

அவன் பருவ வயது அடைந்ததும் தானே ஆடு மாடுகளை ஓட்டிச் செல்வான். மற்ற மேய்க்கிற பையன்களை அவர்களுடைய விளையாட்டுகளை விளையாடும்படி விட்டுவிட்டு அவன் தனியாக உகாதி செய்து கொண்டிருந்தான். அந்த உகாதி என்பது ஒரு நரம்பு வாத்தியம். அதைக் கொண்டு தன்னுடைய பாட்டுகளைப் பாட அவன் விரும்பினான். மற்ற மேய்ப்பவர்கள் தங்களுடைய விளையாட்டுகளில் அவனையும் சேர்ந்து கொள்ளும்படிச் செய்ய முயற்சித்தார்கள். அவனை அவர்கள் கேலிகூடச் செய்தார்கள். ஒரு கிழவியை விட அவன் எந்த விதத்திலும் சிலாக்கியமானவன் அல்லவென்றும், அம்மாதிரி விஷயங்களில் கிழவிகள் ஈடுபடவேண்டுமென்றும் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் அவனுடைய மனதை மாற்ற முடியவில்லை. சிறிது காலத்திற்குப் பின்னால் மற்றவர்கள் அவனைத் தனியாக

விட்டு விட்டார்கள். ஏனெனில் அவன் கோபம் கொண்டால் மற்ற யாரையும் போல கம்பெடுத்து சிலம்பம் வீச முடியும் என்பதையும், அதனுல் உதைகள் கிடைக்குமென்றும் அவர்கள் அறிவார்கள்.

உகாதி என்ற வாத்தியமானது வில்லைப்போலப் பார்வையில் தோன்றக் கூடியது. ஒரு சிறிய மஞ்சள் பூக்களைக் கொண்ட மரம் தான் அந்த வில்லுக்கு வேண்டிய கட்டைக்குப் பொருத்தமானது. ஆகவே மேய்க்கும் பையன்கள் தங்களுடைய விளையாட்டுகளில் கவனமாய் இருக்கும்போது அவன் அம்மாதிரி மரத்தைத் தேடிக் கொண்டிருந்தான். கடைசியாக ஒன்றைக் கண்டு பிடித்து ஒரு நேரான கொம்பை, அவன், அவனுக்கு வேண்டிய நீளத்திற்கு வெட்டி அதைச் சுத்தமாகப் பட்டை உரித்தான். அதன் பின்னல் அது வெள்ளையாக வழுவழுவென்று தோன்றுகிற வரையில் அதைச் சுத்தம் செய்தான். அந்தக் கம்பின் இரண்டு முனைகளிலும் துவாரம் போட்டான். அதைத் தன்னுடைய விருப்பப்படி வளைத்தான். இதில் ஏற்கனவே அவன் தயார் செய்து வைத்திருந்த ரோமங்களினுல் ஆன ஒரு கயிற்றைக் கட்டினுன். அந்த ரோமங்களை அவனுடைய தந்தையின் பசுக்களின் வால்களிலிருந்து அவன் பிடுங்கினுன். அந்த வில் தயாரானதும் அவன் ஒரு சிறிய சுரைக்காய்க் கூட்டை எடுத்தான். அதன் ஒரு பக்கத்தை வெட்டி அதற்கு உள்ளிருந்ததை எடுத்து அதைத் தயார் செய்து வைத்திருந்தான். இதுதான் சப்தம் கொடுக்கும் பெட்டியாகும். இதை அந்த வில்லில் மூன்றில் இரண்டு பங்கிற்கு அடியில் இணைத்தான். இப்போது வாத்தியம் தயாராகி விட்டது. அவன் ஆற்றிற்குப் போய் சிறந்த நாணல் ஒன்றை வெட்டினுன். அதைக் கொண்டு அந்த உகாதியில் மாட்டியிருக்கும் கம்பியில் லேசாகத் தட்டி வாசிக்க வேண்டும்.

ஒரு அதிசயமான பரபரப்பு கொண்டான். அம்மாதிரி பரபரப்பை அவன் இதற்கு முன்பு அறிந்ததில்லை. தன்னுடைய தந்தையின் மந்தைக்குத் திரும்பிப் போய் அங்கிருந்த ஆடு மாடுகளில் ஒன்ருவது சிதறிப் போகவில்லை என்பதை அறிந்து கொண்ட பின்னுல் ஒரு மர நிழலில்

அமர்ந்து வாசிக்க ஆரம்பித்தான். மற்றவர்கள் வாசிப்பதை பல தடவைகள் பார்த்திருந்த போதிலும் தானே வாசிப்பதற்கு இதற்கு முன்னல் முயற்சி செய்தது இல்லை. மற்றவர்களை விட அவன் நன்ருக வாசிக்க முடியும் என்பதை அவன் எப்படியோ அறிந்திருந்தான். அந்த வாய் திறந்த சுரைக்காய்க் கூட்டை தன்னுடைய திறந்த நெஞ்சில் வைத்து அந்த வில்லின் ஒரு முனையை இடது கை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு பெரு விரலையும் முன் விரலையும் அந்த வில்லில் கட்டப்பட்டிருந்த கம்பியில் வெவ்வேறு இடங்களில் வைத்துக்கொண்டிருந்தான். அந்த விரல்களை வெவ்வேறு இடங்களில் பதிப்பதன் மூலம் அந்த வாத்தியத்தின் சப்தங்கள் மாறுபடும். தனது வலது கையில் அந்தச் சிறிய நாணலைப் பிடித்துக் கொண்டு அந்தக் கம்பியில் தட்டுவதற்காகத் தயாரானன். அவனுடைய இருதயம் வேகமாகவும் பலமாகவும் அடிக்க ஆரம்பித்தது.

அந்த வாத்தியத்தின் மெல்லிய சப்தங்களை ஒரு வேளை தான் கேட்க முடியாமல்போய் விடுமோ என்று பயந்தான். கடைசியாக அந்தக் கம்பியில் கூர்மையாக அடித்தான். அவனுடைய இருதயம் அநேகமாக நின்று விட்ட மாதிரி இருந்தது, ஏனெனில் அவன் கிளப்பிய அந்த ஓசை சுத்தமாகவும், தெளிவாகவும், இனிமையாகவும் இருந்தது. உகாதி வாத்தியங்கள் வாசிப்பதை பலரிடம் அவன் கேட்டிருந்தான். என்ருலும் இவ்வளவு அழகாக அவன் இதற்கு முன்னல் கேட்டதேயில்லை. அந்தச் சப்தம் வானத்தின் உயரத்தில் பறந்து கொண்டிருந்த ஒரு பட்சியின் சப்தத்தைப் போல இருந்தது. காற்றின் வழியாக தெளிவான குளிர்ந்த தண்ணீர்த் துளிகள் விழுவதைப்போல அவனுக்குத் தோன்றியது. மீண்டும் அவன் அந்த நாதத்தைக் கிளப்புவதற்கு வெகு நேரமாயிற்று. கடைசியாக அவன் மீண்டும் ஆரம்பித்தபோது மேலும் மேலும் அதைச் செய்து கொண்டேயிருந்தான். அவனுடைய நாதத்தை மாற்றுவதற்காக வெவ்வேறு இடங்களில் அந்தக் கம்பியில் அவன் விரல்களை வைத்துக் கொண்டிருந்தான். ஒவ்வொன்றும் முதலில் கேட்டதைப்போல அவ்வளவு இனிமையாகவும் அவ்வளவு தெளிவாகவும் இருந்தது. அந்தச் சிறிய நாணலை அந்தக் கம்பிமீது மீண்டும் மீண்டும் அடித்துப்

பலவிதமான ஒலிகளை மந்திரத்தால் செய்வதைப் போல அவன் செய்தான்.

அந்தச் சுரைக்காய்க் கூட்டின் வாயை மெது வாகத் தன்னுடைய மார்பை விட்டு கொஞ்சம் கொஞ்ச மாகத் திறந்தான். மீண்டும் அதை மூடிக் கொண்டான். அவன் வாசித்த அந்த மெட்டு தொனியில் வேறுபட்டு பிறந்து வளர்ந்து ஒரு இரவில் இறக்கிற குரலைப் போலக் கேட்டது. சூரியன் அஸ்தமனமாவதற்கு முன்பாக அவன் ஒரு பயிற்சி பெற்ற சங்கீதக்காரனாக ஆகிவிட்டான். தன் னுடைய தந்தையின் பசுக்களையும் காளைகளையும் ஒன்று சேர்த்து திரட்டி அவைகளை வீட்டிற்கு ஓட்ட ஆரம்பித்தான். அந்த மாட்டு மந்தைக்குப் பின்னல் அவன் போய்க்கொண் டிருந்தபோது ஒரு காலத்தில் ஒரு நடனத்தில் அவன் கேட் டிருந்த ராகத்தை வாசிக்க ஆரம்பித்தான். அவனுடைய பாதம் அந்த சங்கீதத்திற்குத் தக்கபடி ஆடிக்கொண் டிருந்தது. அப்போது மாடுகள் மோக்ஷ லோகத்தில் இருந் ததைப் போல நினைத்தான்.

அந்த நாளிலிருந்து மாகென்னுவின் உகாதி அவனை விட்டுப் பிரிந்ததே இல்லை. அவன் அதன்மீது மிகுந்த பிரிய மாக இருந்தபடியால் அவன் எம்மாதிரியெல்லாம் அழகு படுத்த முடியுமோ அம்மாதிரியெல்லாம் செய்தான். அந்த வில்லின் இரண்டு முனைகளையும் செம்பு, பித்தளைக் கம்பி களால் சுற்றினன். அந்த சுரைக்கூட்டின் மேலே ஒரு கவர்ச்சிகரமான சித்திரம் வரைந்தான். அவன் அந்த வில்லின் இரு பக்கங்களிலும் சுற்றியதோடும் மந்திரத் தாலும் கம்பியைச் சுற்றினன். காலம் ஆக ஆக அவனும் வாத்தியமும் அமாக்சோசா வகுப்பினர் வந்த பிரதேச முழுவதிலும் பிரசித்தமானர்கள். அவனைக் கேலி செய்வ தற்குப் பதிலாக அவன் தங்களிடம் வந்து அந்த வாத்தி யத்தை வாசிக்க வேண்டி மக்கள் கேட்க ஆரம்பித்தார்கள். மாகென்னு அம்மாதிரி அழைப்புகளை எப்போதும் ஒப்புக் கொள்வான். ஏனெனில் தன்னுடைய உகாதியில் வாசிப் பதற்கு அவன் மிகுந்த பிரியம் கொண்டிருந்தான். ஏனென் ருல் மக்கள் ஒருவருக்கொருவர் அம்மாதிரி ஒரு வாத்தி யத்தை இம்மாதிரி எந்த ஒரு வாத்தியக்காரரும் வாசித்தது

இல்லை யென்பதைச் சொல்லிக்கொள்ள வேண்டுமென்று அவன் விரும்பினான்.

உகாதியில் அவன் வாசித்துக் கொண்டிருந்த நேரத்தைத் தவிர மற்ற நேரத்தில் அவ்வளவு சந்தோஷமாய் அவன் இருப்பது இல்லை. தன்னுடைய சொந்தப் பாட்டுகளைப் பாடுவதற்கும் அவன் விரும்பிக் கொண்டிருந்தான். சிறிய ராகங்கள் அவனுடைய மண்டையில் எப்போதும் ஒலித்துக் கொண்டே இருக்கும். மற்ற சங்கீதக்காரர்கள் எப்போதும் வாசித்திராத ராகங்களாய் அவை இருந்தன. சில சமயங்களில் அம்மாதிரி ராகங்கள் ஆகாயத்தில் இருந்து வந்து சேருவதைப் போலத் தோன்றின. திடீரென்று சில சமயங்களில் ஒரு பட்சியின் கானத்தில் ஒரு ராகத்தை அவன் கேட்பானானால் பாஷைகளுக்கிடையில் தண்ணீர் பாடும் ராகத்தை அவன் கண்டு பிடிப்பான். அவன் பாட்டுகளுக்கு வார்த்தைகளும் உண்டு. அந்த வார்த்தைகள் அவனுடைய சங்கீதத்திற்கு ரொம்ப பொருத்தமாய் அமைந்திருந்தன. அந்த சங்கீதத்தின் ஒரு பக்கமாக அவை தோன்றின. அவனுடைய குரல் நன்றாய் இருந்தது. இனிமையாகவும் தணிந்த சுரத்திலும் இருந்தது. மாகென்னா எப்போதும் தனியாய் இருப்பதையே விரும்பினான். ஏனென்றால் அப்போதுதான் அவன் தன்னுடைய பாட்டுகளை உரக்கப் பாடி மரங்களும், புஷ்பங்களும், பட்சிகளும் அதனைக் கேட்க முடியும் என்று நினைத்தான்.

அடுத்த நாள் காலையில் அவன் உகாதியை செய்து முடித்த வேளையில் தன்னுடைய தந்தையின் மாடுகளை மேய்ப்பதற்குக் கொண்டு போனபோது அவன் மற்ற மேய்க்கும் சிறுவர்கள் வருவதற்காகக் காத்திருந்தான். அவர்களுடைய பந்தயங்களை அவன் சோதித்து அவர்களுடைய விளையாட்டுகளைக் கவனித்து அதன் பின்னால் அவனுக்குப் பிரியமான மரத்தின்கீழ் அமர்ந்து அவனுடைய பாட்டுகளில் ஒன்றை வாசிக்க ஆரம்பித்தான். முதல் நாள்தான் அந்தப் பாட்டை அவன் கட்டினான். அவனுடைய வில்லுக்காக கட்டையை வெட்டிக் கொண்டிருந்தபோது அந்தப் பாட்டு அவனுக்கு உதயமாயிற்று.

மாகென்னா பாட ஆரம்பித்ததும் அவன் தனக்கு மேலே உள்ள மரத்திலிருந்து புருக்கள் கூவிக் கொண்டும்

தன்னைச் சுற்றியிருந்த புதர்களில் மாடுகள் மேய்ந்து கொண்டும் இருந்த சப்தம் தவிர அவன் தனிமையில் தான் இருந்தான். அவனுடைய குரல் முன்னைவிட எவ்வளவோ அழகு பொருந்தி இருந்தது. அந்த வெதுவெதுப்பான காற்றில் அவனுடைய முதல் ராகம் மிதந்து சென்ற போது அந்தப் புருக்கள் கூச்சல் இடுவதை நிறுத்திக் கொண்டன. தங்களுடைய தலைகளை ஒரு பக்கமாகச் சாய்த்துக் கவனித்துக் கேட்டன. அந்த மாடுகள் சப்தமிட்டு நடந்து போவதை நிறுத்தின. அவை அசை போடுவதைக்கூட நிறுத்திவிட்டு தங்கள் தலைகளை உயர்வாக நிமிர்த்தி மாகென்னுவை தங்களுடைய பெரிய பழுப்பு நிறக் கண்களால், ஆச்சரியம் நிறைந்த கண்களால் வெறித்துப் பார்த்தன. உலகமே மூச்சை அடக்கிக் கொண்டு நிற்பது போலத் தோன்றியது. அவனுடைய ஆச்சரியமான சங்கீதத்தில் ஒரு ராகத்தைக்கூட விட்டு விடக் கூடாது என்று விரும்பியது போலத் தெரிந்தது. அம்மாதிரி சங்கீதத்தை அதற்கு முன்னால் எப்போதும் யாரும் கேட்டதில்லை. எல்லாம் அசைவற்று நின்றபடியால் அவனுடைய குரல் வெகு தூரமாய் போயிற்று. அந்த ஆடு மேய்க்கிறவர்கள் விளையாட்டுகளில் மும்முரமாய் இருந்தபோதிலும் அவர்களுக்கும் கூட இந்தக் குரல் கேட்டு அவர்கள் விளையாட்டை நிறுத்தி இதைக் கேட்டு ஒருவரையொருவர் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டார்கள். ஒவ்வொருவராக மாகென்னுவுக்குப் பக்கத்தில் ஊர்ந்து வந்து அவனுடைய பாட்டுகளை நன்றாய்க் கேட்பதற்காக அமர்ந்திருந்தார்கள். கடைசியாக அவன் பாடுவதை நிறுத்தியபோது அவனைச் சுற்றி அவர்கள் புல்வெளியில் படுத்துத் தங்கள் கண்களை அவன்மீது குத்திட்டுப் பார்த்துக் கொண்டிருந்ததை அவன் கவனித்தான்.

தன்னுடைய பாட்டை முடித்ததும் தன்னைச் சுற்றி ஏற்பட்டிருந்த அமைதியை அவன் கண்டதும் ஏதோ ஒரு அசாதாரணமான விஷயம் நடந்து விட்டதாக மாகென்னு உணர்ந்தான். அவன் பாடிக் கொண்டிருந்தபோது எந்தக் கனவில் மூடப்பட்டிருந்தானோ அதிலிருந்து விழித்தான். தன்னைச் சுற்றி நண்பர்கள் இருப்பதைப் பார்த்ததும் அவன் புன்முறுவல் காட்டினான்.

"நீங்கள் விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள் என்றல்லவா நான் நினைத்தேன்?" என்று அவன் சொன்னான். ஆனால் அவர்கள் அவனுக்குப் பதில் சொல்லவில்லை. அவர்கள் அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். மாகென்னாவின் பாட்டைப் போன்ற ஒரு பாட்டை அதற்கு முன்னால் எப்போதுமே அவர்கள் கேட்டதில்லை. அவனுடைய குரல் மிகுந்த சுத்தமாகவும், நளினமாகவும், இளமையாகவும், பூலோகத்தைச் சேர்ந்தது அல்லவென்பது போலவும் தோன்றின. அந்தப் பாட்டின் ராகங்கள் அவர்களுக்குப் பழக்கமானதாகவே தோன்றவில்லை. ஒரு தளராத இருதயம் அமைதியாக அடிப்பதைப் போல அவர்களுக்குத் தோன்றியது. அவர்களால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லையென்றாலும் அவனுடைய மேதையை அவர்கள் எப்படியோ உணர்ந்தார்கள். இதற்கு முன்னால் அவர்கள் கேட்டது எதையும் விட இது ஒன்றே சிலாக்கியத்திலும், உணர்ச்சியிலும், உயிரிலும் சிலாக்கியமானதாய் இருந்தது. காட்டுமிராண்டிகள் நடனத்தில் உள்ள பாட்டுகளைப்போல இது இல்லை.

சிறிது நேரம் கழிந்த பின்பு அந்தப் பாட்டை எங்கே கற்றுக் கொண்டான் என்று அவர்கள் கேட்டார்கள். அவன் அது தன்னுடைய சொந்தமான பாட்டு என்று சொல்லியதும் அவர்கள் மிகுந்த திகைப்பு கொண்டார்கள். பின்னால் தங்களுடைய விளையாட்டுகளுக்கு அவர்கள் திரும்பிப் போகும்போது ஒருவருக்கொருவர் மெதுவாக பேசிக் கொண்டும் தலைகளைக் குலுக்கிக் கொண்டும் போனார்கள்.

அன்று மாலை அவர்கள் வீடு திரும்பியதும் மாகென்னாவின் சங்கீதத்தைப் பற்றி தங்களுடைய பெற்றோர்களிடம் சொன்னார்கள். ஆகவே அவனை அடிக்கடி அழைத்துப் பாடும்படி அவர்கள் சொல்வார்கள். சீக்கிரமாக அவனுடைய புகழ் அந்த நாடு பூராவாகப் பரவியது. பக்கத்திலிருந்தும் தூரத்திலிருந்தும் அவன் சங்கீதத்தைக் கேட்பதற்காக மக்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவன் இன்னும் அதிகமான பாட்டுகளை பாடிக் காட்டினான். ஒவ்வொன்றிலும் அந்தப் புதிய அதிசயமான குணம் இருந்தது. மற்ற சங்கீதக்காரர்கள் அவனைக் காப்பியடிக்க

முயற்சித்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவராலும் அவனுடைய சங்கீதத்தைப்போலப் பாட முடியவில்லை. அவர்கள் அவனுடைய சொந்த பாட்டுகளைப் பாடுவதற்கு முயன்ற போது கூட அவை அவன் பாடியதுபோல இல்லை.

ஒவ்வொருவரும் எவ்வளவு அதிகமாக தன்னுடைய சங்கீதத்தை விரும்புகிறார்கள் என்பதைக் கேட்டதும் மாகென்னு மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். ஆனால் அவன் கர்வம் கொள்ளவில்லை. ஏனென்றால் சங்கீதமென்பது ஒரு நேரப்போக்கு என்பதையும் ஆண்களுக்கு உண்டான விளையாட்டுகள் எல்லாம் வேட்டையாடுவதும் போர்களில் தீரத்தைக் காட்டுவது என்பதையும் அவன் அறிவான். இந்தக் குணங்களை மற்ற மக்களைவிட அதிகமாக அவன் பெற்றிருக்காவிட்டாலும் அந்தக் குணங்கள் அவனிடமும் இருந்தன. ஆகவே அவன் தன்னுடைய வித்தையைப் பற்றி அதிகமாக நினைப்பதில்லை. அவன் நாள் பூராவாக தன்னுடைய சங்கீதத்திலும், பாட்டுகளிலும் மும்முரமாக இருக்க முடியும் என்றாலும் அவன் தன்னுடைய வேலையை அமைதியோடு செய்துகொண்டு வந்தான். ஒவ்வொரு நாளும் சூரியன் கிளம்பும் முன்பாக தன்னுடைய தந்தையின் மாடுகளை மேய்ச்சல் தரைக்கு ஓட்டிக் கொண்டு போவான். நாள் பூராவாக அவற்றை மேய்த்துக்கொண்டு இரவில் வீட்டிற்குத் திரும்பி ஓடி வருவான். என்றாலும் எப்போதும் தன்னுடன் தன்னுடைய உகாதியையும் எடுத்துக் கொண்டு போவான். அவனுக்கு ஓய்வு கிடைக்கிற ஒவ்வொரு வினாடியிலும் அவன் அதை வாசித்துப் பாடிக் கொண்டிருப்பான்.

ஒவ்வொரு நாள் அவன் சிறிது நேரம் வாசித்துக் கொண்டிருந்த பின்பு அந்த உகாதியைக் கீழே வைத்து விட்டு நேரப் போக்கிற்காக களிமண்ணினால் ஒரு எருது ஒன்றைச் செய்ய ஆரம்பிப்பான். அவன் அமர்ந்திருந்த இடத்தில் அழகான வெள்ளைக் களிமண் இருந்தது. அது உருவங்கள் செய்வதற்கு ரொம்ப நன்றாய் வரும். அவன் அந்த உருவத்தைச் செய்து கொண்டிருப்பதில் மகிழ்ச்சி பெற்றிருக்கும்போது மற்ற மேய்க்கும் பையன்கள் அங்கே ஓடி வந்து ஒரு பயங்கரமான புயல் உருவாகிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

"புயல் வருவதற்கு முன்பாக நீ வீட்டிற்குப் போக வேண்டுமானால் நீ இப்போதே புறப்பட வேண்டும். எங்களுடைய மாடுகளை இப்போதே நாங்கள் திரும்ப ஓட்டிக் கொண்டு போகப் போகிறோம். நம்முடைய எருதுகளில் ஒன்றை மின்னல் அடித்து விட்டால் நமது பெற்றோர்கள் மிகுந்த கோபம் கொள்வார்கள்" என்று அவர்கள் கூச்சலிட்டார்கள்.

மாகென்னா தன்னுடைய வேலையில் மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தபடியால் எருதின் உருவத்தைக் களிமண்ணில் உருவாக்கிக்கொண்டு இருந்தானே ஒழிய புயலைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. அவன் இதுவரை செய்த எருதுகளில் அது மிக சிலாக்கியமாய் இருந்தது. ஒவ்வொன்றும் நன்றாய் ஆகிக்கொண்டு வருவதாக அவனுக்குத் தோன்றியது. கண்கள் சரியான அளவில் இருந்தன. அவை ஒல்லியாகவும் நேராகவும் இருந்தன. முதுகு அகலமாயும் அது இருக்க வேண்டிய விதத்தில் சமமாகவும் இருந்தது. இப்போது அதற்கு வேண்டியதெல்லாம் தலை ஒன்று தான். அந்த மேய்க்கிற பையன்கள் தங்களுடைய மாடுகளை ஒன்று சேர்த்து ஒவ்வொருவராக ஒருவரையொருவர் கூவி அழைத்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள். கடைசியாக மேய்க்கிற பையன்கள் மீண்டும் அங்கே நின்று அவர்களைப் பின் பற்றிவருமாறு மாகென்னாவைச் சம்மதிக்கும்படிச் செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தார்கள்.

"வா போகலாம் மாகென்னா. உன்னுடைய மாடுகளில் ஒன்றை இழந்து விட்டால் உனக்குப் பயங்கரமான தொந்தரவு வந்து சேரும். புயலோ உண்மையில் ரொம்ப மோசமானதாக இருக்கப் போகிறது. அந்த மின்னல் பட்சி அடித்து விடும். அடிக்கா விட்டால் நீ பார். நீ புத்திசாலித்தனமாக நடந்து எங்களோடு வீட்டிற்கு வந்துவிடு" என்று அவர்கள் சொன்னார்கள்.

ஆனால் மாகென்னா பிடிவாதமாய் இருந்தான்.

"நீங்கள் வீட்டிற்குப் போங்கள். என்னை விட்டு விடுங்கள். நான் பயம் கொள்ளவில்லை" என்று அவன் சொன்னான். அவன் தன்னுடைய களிமண் வேலையைச்

செய்து கொண்டே போனுன். கடைசியாக தன்னுடைய எருதை அவன் செய்து முடித்த பின்பு அதைப் பார்ப்பதற்காக எழுந்து நின்ருன். தன்னுடைய வேலையைக் கண்டு உண்மையிலேயே அவன் மகிழ்ச்சி கொண்டான். அதற்கு இரண்டு கொம்புகளை வைப்பதற்காக அகலமான வெள்ளை முள்ளை அவன் தேட ஆரம்பித்தான். திடீரென்று அங்கே இருண்டு வருவதை அவன் பார்த்ததும் மேலே வானத்தை நோக்கினுன். அந்த மேய்ச்சல் பையன்கள் சொன்னது சரியென்பதை அறிந்ததும் அவனுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. அந்த வானம் கறுப்பாய் இருந்தது. அந்த வானத்தில் மஞ்சளாய்த் தோன்றிய மேகங்கள் காணப்பட்டன. அந்த மேகங்கள் மழையோடு ஒரு புயலும் வரும் என்பதைக் காட்டின. குதித்தெழுந்து தன்னுடைய மந்தையைச் சுற்றிப் பார்த்தான். அவன் புயல் வருவதற்கு முன்பாக அவைகளைத் திரட்டி வீட்டிற்குக் கொண்டுபோக முடியாது என்பதை உடனே அறிந்தான். முதல் தடவையாக இதைக் கண்ட அவன் சிறிது பீதியுற்ருன். அவனுடைய வயிற்றில் ஏதோ ஒருவிதமான உணர்ச்சி தோன்றியது. தன்னுடைய பெற்ருேர்கள் என்ன சொல்வார்கள் என்பதை அவன் நினைத்துப் பார்த்தான். அந்த மாடுகளும் கூட பயந்துபோய் எல்லாம் ஒன்று சேர்ந்து தங்களுடைய தலைகளை மத்தியில் நீட்டி ஒரு கூட்டமாகச் சுற்றி நின்றன. மேலே உயரத்தில் வானத்திற்கு ஊடே மின்னல்கள் பயங்கரமாய்த் தோன்றின. இடி முழக்கமும் தோன்றியபடியால் எல்லாம் அதிர்ந்தன.

இப்போது மாகென்ன செய்யக் கூடியது எதுவுமில்லை. ஆகவே ஒரு அகலமாய் படர்ந்திருந்த மரத்திற்கடியில் அவன் போனுன். மழையிலிருந்து ஒதுங்கிக் கொள்வதற்கு அது நல்ல இடமாய் இருந்தது. அங்கே போய் அமர்ந்து புயல் வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இதற்குள்ளாக அவனுடைய பயம் அதிகமாயிற்று. புயல் கிட்டே நெருங்க நெருங்க எல்லாம் ரொம்ப மோசமானதாய் அவனுக்குத் தோன்றின. திடீரென்று அவனுக்கு ஒரு யுக்தி உதயமாயிற்று.

‘அந்த மின்னல் பறவைக்கு நான் ஒரு பாட்டு பாடுவேன். ஒரு வேளை அதனுல் அது தன்னையோ, தனது

மாட்டு மங்கையையோ தாக்காமல் இருக்கலாம்' என்று அவன் நினைத்தான். தன்னுடைய உகாதியைக் கையில் எடுத்து ஆரம்பத்தில் தன்னுடைய சிறிய நாணலினுல் ஒன்றிரண்டு ராகங்களை மீட்டினுன். அம்மாதிரி அவன் செய்தபோது அவனுக்குப் பாட வேண்டுமென்ற உள்ளுணர்ச்சி ஏற்பட்டது. அவனுடைய குரல் முதலில் கொஞ்சம் அதிர்ச்சி கொண்டதாய் இருந்தது. ஆனுல் சீக்கிரமாக தான் அப்போதிருந்த மோசமான நிலைமையை அவன் மறந்தான். அவனுக்கு இருந்த அபாயத்தையும் மறந்தான். அவன் பாட்டில் உள்ள கவர்ச்சியானது ஒவ்வொன்றையும் அவனை மறக்கும்படிச் செய்தது. அவனுடைய பாட்டு அந்தப் புயல் காற்றை எதிர்கொண்டு அழைக்கும் ஒரு கழுகின் இறக்கைகளை போலப் பறந்து சென்றது.

அவன் பாடி முடிந்ததும் அவனுடைய உகாதியை அந்த மரத்தில் சாத்தி வைத்தான். அதை ஒரு மஞ்சள் கம்பளியினுல் ஜாக்கிரதையாக மூடினுன். அந்தக் கம்பளியை எப்போதும் தன்னுேடு கொண்டு வருவதுண்டு. அதன் பின்னுல் அவன் தான் செய்த அந்த மண் எருதைக் கையில் எடுத்தான். அவன் குப்புறப்படுத்துக் கொண்டு அதைத் தன் முன்பாக நிறுத்தி வைத்தான். தன்னுடைய கன்னத்தைத் தன்னுடைய கைகளில் வைத்துக் கொண்டு தன்னுடைய கைத்தொழிலை—அந்தக் களிமண்ணினுல் செய்யப்பட்ட அழகை வியந்து கொண்டிருந்தான். அந்தக் களிமண் அநேகமாகக் காய்ந்து விட்டது. அது மிகவும் வெண்மையாய் இருந்தபடியால் அந்தப் புயலினுல் ஏற்பட்ட இருட்டிலும் கூட நன்ருய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. சூரிய உதயத்தில் புற்களின் மீது காணப்படும் பனித் துளிகளைப் போல அல்லது புதிதாகப் பிறந்த ஆட்டுக்குட்டியின் மீது காணப்பட்ட வெள்ளை ரோமங்களைப் போல அது பிரகாசித்தது.

தன்னுடைய எருதின்மீது அவன் முழு கவனம் கொண்டிருந்தான். அகவே அந்தப் புயலைப்பற்றி அவன் மறந்தே போனுன். அச்சமயத்தில் திடீரென்று அந்த வானத்தின் குறுக்கே ஒரு மின்னல் மின்னியது. அதைத் தொடர்ந்து ஒரு பிரம்மாண்டமான இடியும் இடித்தது. பூமி

நடுங்கியது. அவன் கண் குருடாய் விட்டது போல இரவும் கவிழ்ந்தது. பின்னுல் வானம் திறந்து மழை பொழிய ஆரம்பித்தது. மாகென்னு இதற்கு முன்னுல் பார்த்திராதபடி அவ்வளவு பெரிய மழையும், அவ்வளவு பெரிய மின்னலும் இடியும் தோன்றின. சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக அந்த வானம் அவன் மீது தன்னுடைய கோபத்தை முழுவதும் பொழிந்து காட்டியது. அவனுக்குக் கீழேயிருந்த பூமி அதிர்ந்தது. இந்த இரண்டிற்கும் மத்தியில் மழை உறுமியது. ஒரு பெரிய வெள்ளம் ஆற்றில் ஓடுவது போல அவன் மீது மழை சாடியது. மின்னல் வர வர வேகமாகவும் சமீபத்திலும் வந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு தடவையும் இடி இடித்த போதெல்லாம் பூமியும் வானமும் ஆயிரக் கணக்கான துகள்களாகச் சிதறியது போலத் தோன்றியது. அந்த மழையோ அவன்மீது வரவர அதிகமாகப் பொழிந்து கொண்டே இருந்தது. இந்த உலகத்தை இந்த வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விடுமோ என்று மாகென்னு பீதியடைந்தான்.

இதற்கு மேல் மோசமாக முடியாது என்று தோன்றிய சமயத்தில் அவனுக்கு மேலே உள்ள அந்த மரத்தில் ஒரு மின்னல் படர்ந்தது. அதன் கீழ்தான் அவன் ஒதுங்கியிருந்தான். அந்த மரம் இந்த இருட்டில் திடீரென்று வெடித்தது. அந்த மின்னல் வேகமாக ஒரு பயங்கரமான சப்தத்தோடு அந்த மரத்தில் மோதியது. கோடிக்கணக்கான நெருப்புப் பொறிகள் ஆகாயத்தில் பறந்தன. ஒரு பெரிய கிளை அந்த இருட்டில் முறிந்து மாகென்னுவின் பின் உடம்புக்குக் குறுக்காக விழுந்தது. அவன் தன்னுடைய முகத்தைத் தன்னுடைய கைகளில் பொத்திக் கொண்டு குப்புறப்படுத்திருந்தான். அவனுக்கு இந்தக் கிளை விழுந்ததனுல் எவ்விதக் காயமும் ஏற்படவில்லை. ஆனுல் அவ்வளவு தூரம் பயந்து போய் இருந்தபடியால் மூச்சுவிடக்கூடத் துணிவில்லை. இருட்டில் அவன் நடுங்கிக் கொண்டு இருந்தான். இந்தப் பயங்கரமானது ஒரு முடிவிற்கு வராதா என்று நினைத்துக் கொண்டிருந்தான். சில சமயங்களில் தான் உயிரோடு இருக்கிறேமா அல்லது செத்துப்போனேமா என்று நிச்சயமாக அறிய முடியாமல் இருந்தான். ஆனுல் அந்த நேரம் பூராவாக தன்னுடைய அன்பான உகாதியைப்

பற்றியே அவன் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். அந்த உகாதியை அவன் தன்னுடைய மஞ்சள் கம்பளியில் சுற்றி மரத்தில் சாய்த்து வைத்திருந்தான். அதற்கு என்ன நேரிட்டது என்பதை அறிந்து கொள்வதற்கு அவன் எழுந்திருக்க அவன் துணிவு கொள்ளவில்லை. ஏனெனில் அவன் அசைந்தால் அவனை வந்து சாடும் என்று அவன் நினைத்திருந்தான். அந்த மின்னல் மரத்தைத் தாக்கியதும் அவன் தன்னுடைய உயிருக்கு முடிவு வந்து விட்டது என்று நிச்சயமாய் நம்பினான்.

அவன் அதிர்ச்சியடைந்து குளிரினாலும் பயத்தினாலும் உடல் நடுங்கி அமைதியாக அழுதுகொண்டு மரணத்தை நோக்கி எதிர்பார்த்துப் படுத்துக் கொண்டிருந்தான்.

ஒன்றும் ஏற்படவில்லை.

அந்தப் புயல் எப்படி ஆரம்பமாயிற்றோ அதே மாதிரி திடீரென்று நின்று விட்டது. அச்சமயம் மழை இல்லை; காற்றும் இல்லை; இடியும் இல்லை; ஒரு நிமிஷத்திற்கு முன்னால் ஏற்பட்ட அந்தப் பெரிய சலசலப்புக்குப் பின்னால் ஒரு பரிதாபகரமான அமைதி அங்கே நிலவியிருந்தது. அந்தச் சப்தங்களைவிட இந்த அமைதி அவனுக்கு அதிக பயமாய் இருந்தது. ஒரு வேளை அவன் செத்துப்போய் இருப்பானோ? அவன் தன் கண்களை ஒரு வினாடி திறந்து பார்த்தான். ஆனால் இருட்டு ஒரே கறுப்பாய் இருந்தபடியாலும் அமைதியாகவும் தனியாகவும் இருந்தபடியாலும் மீண்டும் அவன் கண்களை மூடிக்கொண்டான். இன்னும் எதுவும் ஏற்படவில்லை. அவனுக்கு மேலாக அந்தக் கறுப்பு இடி மின்னல்கள் கலைந்து போய்க் கொண்டிருந்தன. மெதுவாக ஒரு மெல்லிய வெளிச்சம் அந்த மேகங்களின் ஊடே வர ஆரம்பித்தது. அதாவது சூரிய உதயத்தில் எப்படி இருக்குமோ அதே மாதிரி இருந்தது. சூரியன் இன்னமும் வானத்தில் உயர இருந்தது. சீக்கிரமாக அந்த நீலவானம் மேகங்களின் ஊடே பிரகாசிக்க ஆரம்பித்தது. சூரிய வெளிச்சம் பூமி மீது இருந்த மூடு பனியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைத்தது. அந்த மூடு பனி ஒரு துணியைப் போல பூமிக்கு மேல் மூடி நின்றது. சூரியன் மறுபடியும் தோன்ற ஆரம்பித்தவுடன் பறவைகள் மீண்டும் தோன்றி

தங்களைச் சிலிர்த்துக்கொண்டு ஒன்றிரு கூச்சல்கள் போட்டு அங்கிருந்து பறந்தும் குதித்தும் தங்களுக்கு வேண்டிய தீனியைத் தேடுவதற்காக எதுவுமே ஏற்படாதது போல ஆரம்பித்தன.

பறவைகளின் சப்தங்கள் கேட்டதும் மாகென்னு கண்களைத் திறந்தான். வெளிச்சத்தைப் பார்த்ததும் அவன் அந்த மரத்தின் நிழலிலிருந்து வெளியே வந்து பார்த்தான். அவன் அங்கே கீழே அமர்ந்து சம்மனம் போட்டுக்கொண்டு தன்னைச் சுற்றிப் பார்த்தான். இன்னமும் அவனுக்கு அதிர்ச்சியினால் தலை சுற்றிக் கொண்டிருந்தது. அவன் என்ன பார்த்தானே அதிலிருந்து அவனுக்கு இன்னமும் சௌஜன்யம் ஏற்படவில்லை. நிழல்களும், மூடு பனியும் நிறைந்த பூமியை அவன் விழிக்கும்போது பார்த்தான். அந்தப் பூமி ஆரம்பத்தில் உற்பத்தியானபோது எப்படிக் காணப்பட்டிருக்குமோ அதே மாதிரி அவனுக்குத் தோன்றியது. அந்தச் சூரிய வெளிச்சம் இன்னமும் பூமி மீது படர்ந்திருந்த அந்த மூடுபனியோடு போராடிக்கொண்டிருந்தது. மெதுவாகச் சுருண்டு கொண்ட அந்த மூடுபனிக்கு ஊடே சூரியனுடைய கிரணங்கள் வந்து கொண்டிருந்தன. அதற்கு மத்தியில் புதர்களும் மரங்களும் தெரிவதும் மறைவதுமாக இருந்தன. வெகுநேரம் வரையில் மாகென்னு அம்மாதிரியே உட்கார்ந்து தன்னைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனல் கொஞ்சம் கொஞ்சமாக அந்த மூடு பனி மேலே போக ஆரம்பித்தது. அந்தச் சூரியன் வர வர அதிக உஷ்ணத்தோடு பிரகாசிக்க ஆரம்பித்தது. அதனல் சிறிது தூரத்தில் நின்ற அவனுடைய தந்தையின் மாட்டு மந்தையை அவன் பார்க்க முடிந்தது. அவை இன்னமும் ஒரு கூட்டமாக தங்கள் தலைகளை ஒன்று சேர்த்து வைத்துக் கொண்டு அவன் முன்பு பார்த்தபடியே நின்று கொண்டிருந்தன. அவை இப்போது அங்குமிங்கும் அசைய ஆரம்பித்தன. அதாவது தங்களுக்கு வேண்டிய இனிப்பான பச்சைப் புற்களைத் தேடி அவை புறப்பட்டன. அவனுடைய அனுபவமுள்ள கண்களால் அந்த மாட்டு மந்தையைச் சீக்கிரமாக—வேகமாக எண்ணிப் பார்த்தான். அவனுடைய எண்ணிக்கை சரியாகவும், ஒன்று கூட இடியினல் தாக்கப்படவில்லை யென்பதை அறிந்ததும் திருப்தியோடு பெருமூச்சு விட்டான்.

சூரிய கிரணம் அவனுடைய தோள்மீது விழுந்து அவனை வெது வெதுப்பாக்கியது. அதே சமயத்தில் அவனுக்கு முன்னால் கிடந்த ஏதோ ஒரு வெள்ளைப் பொருள் மீதும் அந்தக் கிரணம் விழுந்தது. அந்தச் சிறிய பொருள் அவன் கவனத்தை இழுத்தது. அது அவன் செய்து முடித்த வெள்ளைக் களிமண்ணினால் ஆன காளைமாடு என் பதை அவன் கண்டதும் ஆச்சரியம் அடைந்தான். அதைக் கையில் எடுத்துப் புன்னகை கொண்டான். இன்னமும் அதே மாதிரியிலேயே பூரணத்துவத்தோடு இருந்தது. அது சேதம் அடையவில்லை. திடீரென்று தன்னுடைய உகாதியை அவன் நினைவு கூர்ந்தான். அவன் குதித்தெழுந்து மரத்திற் குக் கீழே இருந்த எதையோ பார்ப்பதற்காகத் திரும்பினான். கம்பளி அப்படியேதான் இருந்தது.

அவனுடைய நடுங்கும் கைகளில் அந்தக் கம்பளியை அதன் மீதிருந்து அகற்றினான். அந்த உகாதி பந்தோபஸ் தாய் இருந்தது. அவன் தன்னுடைய தலைமுடியில் வைத் திருந்த அந்தச் சிறிய நாணலைத் தொட்டுப் பார்த்தான். அது அவன் வைத்தபடியே இருந்தது. அவனுடைய வலது காதுக்கு மேலாக கொண்டை ஊசியைப் போல அது இருந்தது. அதை எடுத்து ஒன்றிரண்டு மெட்டுகளை வாசித்து உரக்கச் சிரித்தான். எல்லாம் சரியாகவே வந்துகொண் டிருந்தது. மாட்டுமந்தை பந்தோபஸ்தாய் இருக்கிறது. உகாதியும் அப்படியே இருக்கிறது. சூரியனும் மீண்டும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். வானமும் நீல நிறமாய் இருக்கிறது. அவனைச் சுற்றியுள்ள பூமியும் சூரியனுடைய வெது வெதுப்பினால் மீண்டும் பழையபடியே அழகாகத் தோன்ற ஆரம்பித்துக் கொண்டிருந்தது. எல்லா பக்கங்களி லிருந்தும் பறவைகள் பாடுவதும், சிறிய ஓடைகளிலிருந்து மெதுவாகத் தண்ணீர் ஓடும் ஓசைகளும் அவனுக்குக் கேட்டுக் கொண்டிருந்தன. அந்த ஓடைகள் அவனைச் சுற்றி பல வழிகளிலும் பல இடங்களிலும் வெள்ளி நூலைப் போல ஓடிக் கொண்டிருந்தன. அவன் மீண்டும் சிரித்தான். உடனே திடீரென்று நிறுத்தினான். ஏனெனில் ஒரு குரல், ஒரு இடிமுழக்கம் போன்ற குரல், மரத்திற்கு மேலாக இருந்து அவனுக்குக் கேட்டது.

"நீ ஏன் சிரிக்கிறாய் மாகென்னா? நீ மகிழ்ச்சியாய் இருக்கிறாயா?" என்று அந்தக் குரல் கேட்டது.

மாகென்ன மெதுவாக மேலே பார்த்தான். அவனுடைய வயிற்றில் பீதி கலக்கிக் கொண்டிருந்தது. அவன் பார்த்த காட்சி அவனை மலைக்கும்படி வைத்தது. அந்த மரத்தின் உச்சியில், அதாவது அந்தப் புயலினல் கிளைகள் எல்லாம் அடிபட்டுப்போன அந்த மரத்தின் உச்சியில் ஒரு பறவை அமர்ந்திருந்தது. அம்மாதிரி பறவையை அதற்கு முன்பு அவன் பார்த்ததே இல்லை. அது மிகவும் அழகாய் இருந்தது. அதனுடைய தலை ஒரு கழுகைப் போல இருந்தது. அதனுடைய அலகு சிகப்பாய் இருந்தது. அதனுடைய கண்கள் சிகப்பு வட்டங்களோடு தோன்றின. நெருப்புக் கங்கு போல அவை சிகப்பாகப் பிரகாசித்தன. அதனுடைய மார்பு சிவந்த நிறத்தில் காணப்பட்டது. அதனுடைய கால்களும் இறகுகளும் ஜ்வாலையைப் போலப் பிரகாசித்தன. அதனுடைய கழுத்தும் முதுகும் மாகென்ன இதற்கு முன் பார்க்காத ஒரு நிறத்தில் தோன்றின. பச்சை, மஞ்சள், நீலம் போன்று, இன்னம் எத்தனையோ வர்ணங்கள் தோன்றின. அவனல் அந்தப் பெயர்களை எல்லாம் நினைக்கக் கூட முடியாது. அவன் அந்தப்பட்சியை வெறித்துப் பார்த்துக்கொண்டே நின்ருன். அந்தக் குரல் எங்கிருந்து வந்தது என்பதை அறிவதற்காக அவன் இன்னமும் ஆச்சரியம் கொண்டிருந்தான். ஏனெனில் ஒரு பறவை பேச முடியும் என்பதை அவனல் ஊகிக்க முடியவில்லை. மீண்டும் அந்தக் குரல் பழைய கேள்வியைக் கேட்டது.

“நீ ஏன் சிரிக்கிருய் மாகென்ன? நீ சந்தோஷமாய் இருக்கிருயா?”

மாகென்ன வாய் பிளந்து ஏதோ முனகினன். இச்சமயம் அவனுக்குச் சந்தேகமே இல்லை. அந்தக் கேள்வியை அந்தப் பறவைதான் கேட்டது. அந்தக் குரல் முன்னல் கேட்ட இடி முழக்கத்தை விட அதிக பயங்கரமானதாய் இருந்தது.

“நான்...நான் மிகுந்த சந்தோஷமாய் இருக்கிறேன்... உனக்கு நன்றி. இதோ பார். அங்கே......ஒரு பயங்கரமான புயல் வந்தது......என்னுடைய மாட்டு மந்தையும் நானும்......சௌக்யமாய் இருக்கிரேம்......நன்ருய் இருக்கிரேம்” என்று அவன் சொன்னன்.

இப்போது அந்தப் பறவை சிரித்தது. அதன் சிரிப்பு அந்த மரத்தையே ஆட்டியது.

"நீ சந்தோஷமாய் இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று அந்தப் பறவை சொல்லியது. "நான் சிரிப்பதைக் கண்டு நீ வருத்தப்படக்கூடாது. ஏனெனில் அது மிகுந்த வேடிக்கையாய் இருக்கிறது. நான் இங்கே படுத்துக் கொள்வதற்காகவே வந்தேன். ஆனல் அச்சமயம் உன்னுடைய பாட்டைப் பாடிக்கொண்டிருந்தாய், அதில் எனக்கு மிகுந்த திருப்தி. ஆகவே நான் உன்னுடைய அபிப்ராயத்தைக் கேட்பதற்காக இங்கே இருக்கிறேன்."

மாகென்ன மிகுந்த பீதியோடு முழங்கால் படியிட்டான். இப்போது அவன் உடல் பீதியினல் நடுங்கிக் கொண்டிருந்தபடியால் அவனல் பேசவே முடியவில்லை. "மின்னல் பறவை" என்றுதான் அவனல் வாய் திறந்து சொல்ல முடிந்தது. அவன் அந்த இடத்தில் அதுவரை அனுபவித்து வந்த உஷ்ணம் சூரியனுடைய ஒளியினல் அல்ல என்பதையும் அந்தப் பறவையிலிருந்தே அது வந்தது என்பதையும் அறிந்தபோது பீதியுற்ருன். அந்த மரத்தின் முறிந்து நின்ற கிளைமீது அந்த மின்னல் பறவை உட்கார்ந்து கொண்டிருந்தது. அந்தக் கட்டை எரிந்து கொண்டு கறுப்பு நிறமாகி அதிலிருந்த அந்தப் பறவையைச் சுற்றி புகை கிளம்பிக் கொண்டிருந்தது.

"ஆமாம், நான் தான் மின்னல் பறவை" என்று அந்தக் குரல் முழங்கியது. "என்னைப் பார்த்துப் பயப்பட வேண்டாம், உனக்கு நான் கெடுதல் செய்யமாட்டேன். நான் மக்கள் பாடிய பாட்டுகளைக் கேட்டிருக்கிறேன். ஆனல் நீ பாடுவதைப் போல அவைகளில் ஒன்று கூட இல்லை. நீ அதை எங்கிருந்து கற்றுக்கொண்டாய் மாகென்ன?"

"ஓ பராக்கிரமம் மிகுந்த மின்னல் பறவையே, நான் அதை யாரிடமிருந்தும் கற்றுக் கொள்ளவில்லை. என்னுடைய மனதில் எது தோன்றியதோ அதைப் பாடுகிறேன். அந்தச் சங்கீதம் காற்றுகளிலிருந்து எனக்கு வந்து சேருகிறது."

" அது ஒரு மிகச் சிறந்த பாட்டு மாகென்னு. அதை நான் வெகு காலம் நினைவு கூர்ந்து கொண்டே இருப்பேன். நீ உன்னுடைய கையில் வைத்திருக்கும் அந்தக் காளை மாடு மிகுந்த சிலாக்கியமானதாய் இருக்கிறது. அதைக் கூட நீதான் செய்தாயா ?"

" ஆமாம். ஓ, மின்னல் பறவையே! அது நான் என்னுடைய தந்தையின் மந்தையை மேய்த்துக் கொண்டிருந்தபோது நேரம் போவதற்காகச் செய்தேன்."

" நீ மாட்டு மந்தையை மிகுந்து பிரியத்தோடு பார்த்துக் கொள்கிறுய். அதேமாதிரி நீ களிமண்ணில் செய்து கொண்டும் உன்னுடைய தந்தையின் மாட்டு மந்தையை நீ மேய்த்துக் கொண்டும் இருக்கிருய். உனக்குச் சொந்தமான மாடுகள் ஒன்றும் இல்லையா ?"

" நான் இன்னும் வாலிபமாய் இருக்கிறேன். ஓ! பறவைகளின் தந்தையே, பிற்காலத்தில் எனக்கு என்று வீட்டையும், மந்தையையும் பெறலாம்! அந்தக் காலம் வருகிற வரையில் என்னுடைய தந்தையின் மந்தையை நான் மேய்த்து இரவு நேரங்களில் பந்தோபஸ்தாய் வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்."

ஒரு விஞடி அங்கு அமைதி நிலவியது. அதற்குப் பின்னுல் அந்த மின்னல் பறவை மீண்டும் பேசியது.

" நீ நன்ருய் பேசுகிருய். உன்னுடைய பாட்டுகளும் மற்றவர்களுடைய பாட்டுகளைவிட நன்ருய் இருக்கிறது. நான் உனக்குச் சொந்தமாக வைத்துக் கொள்வதற்காக ஒரு காளை மாடு கொடுக்கிறேன். அது உன்னுடன் உனது ஆயுள் பூராவாகத் தங்கியிருக்கும். இப்போது நான் சொல்லப் போவதைக் கவனமாய்க் கேள். தரை மீது மக்கள் எப்படி வசிக்கிருர்களோ அதே மாதிரி தண்ணீருக்கு அடியிலும் மக்கள் வசிக்கிருர்கள் என்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயம். அந்த மக்களிடமிருந்து உனக்கு ஒரு வெள்ளை காளை மாட்டை, நீ கையில் வைத்துக் கொண்டிருக்கிற மாதிரி ஒரு காளை மாட்டை உனக்குக் கொடுக்கிறேன். அந்தக் காளை மாடு உயிருள்ளதாய் இருக்கும். நீ கையில் வைத்திருப்பதைவிட பெரியதாகவும், சிலாக்கியமானதாகவும், உன்னுடைய வகுப்பினர்கள்

வைத்திருக்கும் காளை மாடுகள் எல்லாவற்றையும் விடச் சிறந்ததாகவும் இருக்கும்.''

"நான் அந்தக் காளையை எங்கே போய்க் கண்டு பிடிப்பது? ஓ பராக்கிரமமுடைய மின்னல் பறவையே!'' என்று மாகென்னு முனங்கினுன். ஏனெனின் அவன் காதுகளை அவனுல் நம்ப முடியவில்லை.

"கவனித்துக் கேள். நான் உனக்குச் சொல்லு கிறேன். நான் மிகுந்த உஷ்ணமாய் விட்டேன். நான் இருக்கும் இந்த மரமும் எரிய ஆரம்பித்து விட்டது. நான் பூமியைத் தாக்கிய பிறகு தண்ணீருக்குள் இறங்கி என்னைக் குளிர்ச்சியாக்கிக் கொள்ள வேண்டுமென்று உனக்குத் தெரியும். இல்லையானுல் அந்த மரத்தைப் போலவே நானும் எரிய ஆரம்பிப்பேன். நான் அந்தத் தண்ணீருக்குள் அமிழ்ந்ததும் அங்கே உள்ள தண்ணீருக் கடியில் உள்ள மக்களை நான் பார்ப்பேன். அவர்களிட மிருந்து உனக்கு உன்னுடைய காளையை நான் அனுப்பு வேன். அங்கே தூரத்தில் தெரிகிற நதி உனக்குத் தெரியும் அல்லவா?''

"எனக்கு அது தெரியும், மகா பெரிய பறவையே.''

"நீர்யானை வாழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கும் அந்தப் பெரிய குளமும் கூட உனக்குத் தெரியும் அல்லவா?''

"நிச்சயமாக, அதை நான் நன்ருக அறிவேன்.''

"நான் என்னைக் குளிர்ச்சி செய்துகொள்வதற்காக நான் அந்தக் குளத்தின் தண்ணீருக்குள் மூழ்குவேன். நீ அங்கே சீக்கிரமாகப் போய்ச் சேர். உன்னேடு உன்னுடைய கையிலுள்ள களிமண் காளையை எடுத்துக்கொண்டு போ. அந்தக் காளையைக் குளத்தின் மத்தியில் வீசி எறி. அந்தத் தண்ணீருக்கு அடியில் வாழ்ந்து வருகிறவர்கள் உனக்கு எம்மாதிரி காளையை அனுப்ப வேண்டுமென்பதை அதி லிருந்து அவர்கள் அறிந்துகொள்வார்கள். அதன் பின்னுல் நான் அந்தக் குளத்தில் மூழ்குவேன். உனக்கு உன்னுடைய காளை வந்து சேரும்.''

"ஓ மின்னல் பறவையே! நீ என்ன சொல்கிருயோ அம்மாதிரியே நான் செய்வேன்."

"ரொம்ப நல்லது. இப்போது நான் கொடுக்கப்போகும் அந்தக் காளை உன்னுடைய உத்தரவுக்குக் கீழ்ப்படியும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். அதை வேறு யாரும் உன்னிடமிருந்து பறித்துக்கொண்டு போக முடியாது. அந்தக் காளை எங்கே போகிறதோ அங்கே உன்னுடைய மாட்டு மந்தை பின்னலேயே போகும். உனக்கு விசேஷமாக ஏதாவது செய்ய வேண்டுமென்று நீ விரும்பினல் நீ அந்தக் காளையிடம் ஒரு பாட்டு பாட வேண்டும். அது நீ என்ன கேட்கிருய் என்பதையறிந்து கொள்ளும். இப்போது நான் உன்னுடைய பாட்டை மற்ெருரு தடவை கேட்க வேண்டும். உன்னுடைய காளையை நீ 'பாடோலி' என்று பெயர் இட்டு அழை. அது உனக்கு ஒரு நல்ல நண்பனுக இருக்குமென்பதை நான் இப்போது சொல்லியதிலிருந்தெல்லாம் அறிந்து கொண் டாயா?"

"ஓ மகாபெரிய பறவையே! உனக்கு நன்றி சொல்வதற்கு வார்த்தைகளே என்னிடம் இல்லை. ஆமாம், எனக்குப் புரிகிறது. நீ என்ன சொல்கிருயோ அம்மாதிரியே நான் செய்வேன். உன்னுடைய இந்த அன்பிற்கு நான் தகுதி உள்ளவனு என்பது எனக்குத் தெரியவில்லை."

அதற்கு மேல் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அந்த மின்னல் பறவை தனது இறக்கைகளை விரித்துக்கொண்டு எவ்வித சிரமுமில்லாமல் அந்த மரத்திலிருந்து உடனே பறந்து சென்றது. வர வர சுற்று வட்டங்களில் மேலும் மேலும் போய்க்கொண்டே இருந்தது. அதனுடைய இறக்கைகளின் கீழ்ப் பாகமும் அதனுடைய மார்பைப் போலவே சிவப்பு நிறமாய் இருப்பதை மாகென்ன கண்டான். அவன் குளத்திற்குப் போய்ச் சேருவதற்குத் தாமதமாகி விடக்கூடாதே என்று பயந்து தன்னுடைய ஒரு கையில் உகாதியைப் பற்றிக்கொண்டு, இன்னொரு கையில் களிமண் காளைமாட்டைப் பற்றிக்கொண்டு ஓட ஆரம்பித் தான்.

அவன் ஓடியதனுல் களேப்படைந்து மூச்சுத்திணற அந்தக் குளத்துக்கு வந்து சேர்ந்தான். மேலே மின்னல் பறவை தெரிகிறதா என்பதைப் பார்ப்பதற்காக அண்ணுந்து பார்த்தான். மேலே வெகு தூரத்தில் அந்த நீல வானத்தில் ஒரு சிறிய புள்ளி மட்டும் தெரிந்தது. அவன் அவனுடைய தலையை—அந்தக் களிமண் காளேயைக் கையினுல் சுற்றி அந்தக் குளத்தின் நடு மையத்தில் போய் விழும்படி அதை வீசினுன். அது அந்த அமைதியான தண்ணீரின் மேல் பரப்பைத் தொட, அதிலிருந்து கிளம்பிய அலேகள்கரையை நோக்கி வர ஆரம்பித்தபோது அந்த மின்னல் பறவை வானத்திலிருந்து திடீரென்று அந்தத் தண்ணீரில் பாய்ந்து போயிற்று. அந்த இடத்தில் அந்தச் சிறிய களிமண் காளே விழுந்த அதே இடத்தில் அந்தப் பறவையும் மூழ்கியது. அந்த மின்னல் பறவை மூழ்கிய பொழுது கண்ணேப் பறிக்கும்படியான ஒரு மின்னலும், பிரும்மாண்டமான ஒரு இடி முழக்கமும் தோன்றிய படியால் மாகென்னு அப்படியே பூமியில்சாய்ந்து விட்டான். சிறிய அலேகளுக்குப் பதிலாக பிரும்மாண்டமான அலேகள் கிளம்பின. ஆகவே அந்தக் குளத்தின் மற்ருெரு கரையை அவனுல் பார்க்க முடியவில்லே.

அந்தப் பிரும்மாண்டமான அலேகள் அவனே நோக்கி வந்துகொண்டிருந்தன. அவுன் பூமியில் படுத்து அங்கிருந்த புற்களேக் கையில் பற்றிக் கொண்டிருந்தான். அந்த அலேகள் வந்து தன்னே அடித்துக்கொண்டு போகாமல் இருக்கவேண்டுமே என்பதற்காக அம்மாதிரி செய்தான். அவன் மீது தண்ணீர் வந்து மோதி மீண்டும் குளத்திற்குள் திரும்பியது. அவன் நிமிர்ந்து பார்த்தபோது ஒரு மிகப் பெரிய காளே, அவன் இதற்குமுன் எப்போதும் பார்த்திராத அவ்வளவு பெரிய காளே சாந்தமாக அந்தக் கரையிலிருந்து அந்த அலே போனவுடனே நடந்து வந்து கொண்டிருந்தது. அது பனியைப் போன்று வெள்ளேயாய் இருந்தது. அதற்குக் கொம்புகள் இல்லே. தன்னுடைய களிமண் காளேக்குக் கொம்புகளே வைக்கமுற்களே அவன் கண்டுபிடிக்க முடியவில்லே என்பதை அச்சமயம் நினேவு கூர்ந்தான்.

அந்த வெள்ளே எருது நேராக மாகென்னுவிடம் வந்து அதனுடைய சிவந்த ஈரமான மூக்கினுல் அவனுடைய

கையைத் தேய்த்தது. மெதுவாக அவன் கூவியதைப் போல அதுவும் கத்திற்று.

அதிர்ச்சி அடைந்து சந்தோஷத்தோடு மாகென்னு எழுந்து பாடோலியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு தன்னுடைய தந்தையின் மந்தைக்கு அழைத்துப் போனான்.

"இவையெல்லாம் என்னுடைய தந்தையின் மாடுகள் பாடோலி. அந்த மின்னல் பறவை இவையெல்லாம் உனக்குப் பின்னாலேயே வரும் என்று சொன்னது. இப்போதே நாம் வீட்டிற்கு போகவேண்டும். இல்லையானால் இருட்டி விடும். இங்கு நடந்தவைகளை எல்லாம் நான் என் தந்தைக்குச் சொல்லவேண்டும்" என்று மெதுவாகக் கூறினான்.

மாகென்னுவின் பக்கத்திலிருந்த அந்தப் பாடோலி விலகாமலேயே தணிந்த குரலில் கூவிற்று. அவனுடைய தந்தையின் மாடுகள் அமைதியாக அங்கு மேய்ந்துகொண்டிருந்தன. அவை வெகுதூரத்தில் பரவி நின்றன. அவையெல்லாம் பாடோலியின் கதறலைக் கேட்டதும் எல்லாம் தலை நிமிர்ந்து பார்த்து ஒரு வினாடிகூடத் தயக்கம் இல்லாமல் அதனுடைய அழைப்புக்கு இணங்கி அங்கு வந்து சேர்ந்தன. அதன் பின்னால் மாகென்னு தன்னுடைய கிராமத்தை நோக்கித் திரும்பி வீட்டிற்குப் புறப்பட ஆரம்பித்தான். அவனுக்குப் பின்னால் மாடுகள் போயிற்று. பாடோலி எங்கு சென்றதோ அதன் பின்னால் அந்த மந்தையும் போய்க் கொண்டிருந்தது. அவன் அவற்றை விரட்டவோ, கவனித்துக்கொள்ளவோ, அவன் முன்னால் செய்தது போல செய்ய வேண்டியதில்லை. அல்லது அவை பறந்து எங்கே தவறிவிடுமோ என்பதற்காகச் சேர்த்து வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டியதும் இல்லை. அவை பாடோலிக்குப் பின்னாலேயே ஒன்றன் பின் ஒன்றாகப் பக்கத்தில் நெருங்கி இருக்கவேண்டுமென்ற முயற்சியில் நெருங்கிக் கொண்டு வந்துகொண்டிருந்தன.

அவன் தன்னுடைய அந்த அழகிய வெள்ளைக் காளையை எப்படிப் பெற்றான் என்பதைச் சொன்னான். ஆனால் முதலில் ஒருவரும் அவன் சொன்னதை நம்பவில்லை. எங்கிருந்தோ திருடியிருக்கிறான் என்று சொன்னார்கள். ஆனால் அதன் சொந்தக்காரனைத் தேடியபோது யாரும்

TAMIL ... LIBRARY
104355
MADRAS

கொம்பு இல்லாத அந்த வெள்ளைக் காளையைப் பற்றிக் கேள்விப்பட்டதே இல்லை என்பதை அறிந்து கொண்டார்கள். அந்தக் காளை தங்களுடையது என்று பலர் சொல்வதற்கு விரும்பினார்கள். ஆனால் அந்தப் பாடோலியை வேறு யார் அழைத்தாலும் திரும்புவதில்லை; மாகென்னு அழைத்தால் மட்டுமே திரும்பிப் பார்த்தது. அந்த வகுப்பின் மன்னன் கூட அந்தக் காளையைப் பார்ப்பதற்காகவும் கதையைக் கேட்பதற்காகவும் வந்தான். ஆனால் அவன் மற்றவர்களைப் போலவே ஆச்சரியத்தோடு தலையை ஆட்டிக் கொண்டு போனான்.

கடைசியாக அந்தப் பாடோலி மாகென்னுவின் எருது தான் என்று அந்த வகுப்பு முழுவதும் ஒப்புக்கொண்டது. மாகென்னுவும் பாடோலியும் இப்போது பிரசித்தமானவர் களாய் விட்டார்கள். அவர்கள் இருவரையும் ஒருவர் இல்லாமல் ஒருவரைப் பார்க்க முடியாது.

முன்னால் சொல்லியபடி மாகென்னு ஒரு அமைதியான பையன். அவன் தன்னுடைய புகழ்ச்சியையோ, சங்கீதத் தையோ அல்லது எருதையோ தன்னுடைய கடமைகளில் இடையூறு செய்யும்படி விடுவது இல்லை...... இருக்கிற விசேஷமான காரியங்கள் எல்லாம் நடந்து வெகு நேரம் ஆவதற்கு முன்பாக மாகென்னு வழக்கம் போல தன்னு டைய தந்தையின் மந்தையைப் பாடோலிக்குப் பக்கத்தில் ஓட்டிக் கொண்டு போய்க் கொண்டிருந்தான். பாடோலி அவனுக்குப் பக்கத்தில் மிகுந்த இனிமையான பச்சை புல்லைச் சுவைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தது.

அது ஒரு இனிமையான வஸந்த கால மாலை நேரம். மாகென்னு மெதுவாகப் பாடிக் கொண்டு தன்னுடைய உகாதியை வாசித்துக் கொண்டிருந்தான். மற்ற மேய்ப்ப வர்கள் எல்லோரும் தங்களுடைய மாட்டு மந்தைகளை வீட் டிற்குக் கொண்டு போய் விட்டார்கள். ஆனால் மாகென்னு மட்டும் இனிமையான, மிருதுவான, வெது வெதுப்பான காற்றில் மயங்கி இன்னும் சிறிது நேரம் அங்கே தங்கி அமைதியாக தனிமையில் பாடுவதற்கு விரும்பினான். பாடோலியுடன் தனிமையாய் இருப்பதை விட வேறு எந்த விதத்திலும் அவன் மகிழ்ச்சியாய் இருந்தது கிடையாது. அங்கிருந்த புற்கள் அவனைச் சுற்றி வெகு தூரம் பரவிக்

06,3,B
N63

காணப்பட்டது. அவன் வெது வெதுப்பாகவும் சௌக்ய மாகவும் இருப்பதாக உணர்ந்தான். அன்று மாலை நேரம் போனதே அவனுக்குத் தெரியவில்லை. சூரியன் அஸ்தமன மாகிக் கொண்டிருந்தது. பூரண சந்திரன் பிரும்மாண்ட மாக வானத்தில் தெரிந்து கொண்டிருந்தான். அதனுடைய வெள்ளி வெளிச்சம் நீல நிறத்தோடு அவனுக்குக் கவர்ச்சி கரமாய்த் தோன்றியது.

பாடோலி மெதுவாகக் கத்தி தன்னுடைய மூக்கால் மாகென்னுவைத் தள்ளியது.

" ரொம்ப சரி பாடோலி, நாம் சீக்கிரம் திரும்ப வேண்டு மென்று நினைக்கிறேன். இல்லையென்றால் நமக்கு என்ன நேரிட்டதோ என்று வீட்டில் உள்ளவர்கள் கவலை கொண்டி ருப்பார்கள் " என்று மாகென்னு சொன்னான். ஆனால் என்ன காரணத்தாலோ அவன் எழுந்திருக்க விரும்பவில்லை. அவன் பாடோலியின் மூக்கில் தடவி விட்டுக் கொண்டு சொன்னான், " இன்னும் ஒரே ஒரு பாட்டு மட்டும் பாடோலி. இங்கே இன்று மிகவும் இனிமையாக இருக்கிறது. நாளை ஒரு வேளை மழை பெய்யலாம்; நாளை என்ன நேரும் என்பதை யார் அறிவார்கள் " என்று.

பாடோலி விடாப்பிடியாக மெதுவாகக் கத்திக் கொண் டிருந்தது. மாகென்னுவின் மந்தைகள் பரபரப்போடு சுற்றி வந்து நின்று கொண்டு வீட்டிற்குத் திரும்ப வேண்டும் என் பதைப் போல ஆவல் உள்ளவைகளாகக் காணப்பட்டன.

பாவம், மாகென்னு பாட்டும், பாடோலியின் கத்தலும் அங்கு வந்த மனிதப் பட்சிணிகளான ஒரு கொள்ளைக்காரக் கூட்டத்தின் காதில் கேட்டன. அவர்கள் மலைகளில் உள்ள தங்களுடைய கிராமத்திற்கு ஒரு மந்தை மாடுகள் வேண்டுமென்பதற்காக அங்கே தேடிக்கொண்டு வந்திருந் தார்கள். அவர்கள் மௌனமாக அங்கிருந்த புதர்களின் வழியாக நகர்ந்து வந்து அந்த மாகென்னுவையும் அவனு டைய மந்தையையும் சூழ்ந்து கொண்டார்கள். பின்னால் திடீரென்று அவன் மீது பாய்ந்தார்கள். அவனுடைய கரங்களை இருவர் பிடித்துக் கொண்டார்கள். மற்றவர்கள் பாடோலி, அந்த மாடுகளை எல்லாம் அடித்து தங்களுடைய கிராமத்திற்கு விரட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால்

அவர்கள் என்னதான் அடித்தாலும் பாடோலி நகரவில்லை. பாடோலி நகராமல் இருந்தபடியால் அந்த மாட்டு மந்தையும் நகரவில்லை.

அந்த மனிதப் பட்சிணிகளின் கூட்டத்தலைவன் கோபத்தினால் மாகென்னாவை அழைத்தான். "அவ்வளவு தூரம் அடித்த பின்பும் அந்த மாடுகள் நகராமல் இருப்பது ஏன் ?" என்று அவன் கேட்டான்.

"நீ அவைகளை மந்திரத்தால் மயக்கி இருக்கிறாய். அதனால் தான் அவை அசைய மறுக்கின்றன" என்று அவன் கத்தினான். பயத்தினால் மாகென்னா நடுங்கினான்.

"ஓ தலைவரே, அவைகளை மந்திரத்தால் கட்டுப்படுத்தவில்லை. அந்தப் பெரிய வெள்ளை காளையான பாடோலி தான் அதற்குக் காரணம். அந்த வெள்ளைக் காளை எங்கே போகிறதோ அங்கே தான் மற்ற மாடுகளும் போகும். வீட்டிற்குப் போவதற்குச் சரியான பாதையை அந்த வெள்ளைக்காளை அறியும். அவைகளை அது அழைத்துக் கொண்டு நான் சொல்லும்போது திரும்பும். நீர் எங்கே போக வேண்டுமென்று விரும்புகிறீரோ அந்தப் பாதை அதற்குத் தெரியாது. அதனால் அது போகவில்லை" என்று சொன்னான்.

அந்தத் தலைவன் மாகென்னாவை நன்றாக அடிக்கும்படி உத்தரவிட்டான். அவனுடைய இரண்டு வீரர்கள் மாகென்னாவைத் தரையில் அமுக்கி அவனைப் பிடித்துக் கொண்டார்கள். வேறு இருவர்கள் அவனைக் கம்புகளால் அடித்து நொறுக்கினார்கள். அவர்கள் அடித்து முடிந்ததும் அவன் சொன்னான்:

"இப்போது நான் எந்தப்பாதை வழியாகப் போக வேண்டுமென்று விரும்புகிறேனோ அந்தப்பாதை வழியாகப் போகும்படி நீ உன்னுடைய வெள்ளைக் காளையிடம் சொல்லு." அடிபட்ட வலியினால் மாகென்னா அழுதான்.

இனிமேல் ஒரு பிரயோஜனமும் இல்லை. "நான் பாடினால் தான் பாடோலி கவனிக்கும். அம்மாதிரி தான் எங்களுக்குள் ஏற்பாடு" என்று அவன் திக்கிக்கொண்டு சொன்னான்.

“ நீ அதனை மந்திரத்தால் மயக்கி இருக்கிறாய். ஒரு காளையோடு ஏற்பாடு செய்வது என்பது இதுவரை யாரும் கேட்டிராத விஷயம். மீண்டும் அவனை அடியுங்கள் ” என்று அந்தத் தலைவன் தன்னுடைய வீரர்களுக்கு உத்தர விட்டான்.

ஆகவே மீண்டும் மாகென்னுவைத் தரையில் தள்ளி அடித்தார்கள். ஓய்ந்து போகிற வரை அடித்தார்கள்.

“ இப்போது பாடோலியிடம் பாடவேண்டுமானால் நீ பாடு. நான் அவைகளை எங்கே ஓட்டுகிறேனோ அங்கே போகும்படிச் சொல்லு. சீக்கிரமாகச் சொல்லு. நாங்கள் எவ்வளவு தூரம் போக வேண்டுமோ அங்கே போய்ச் சேருவதற்குள் நேரமாகி விடும்.”

ஆகவே தன்னால் முடிந்த வரையில் மாகென்னு பாடினான். அவனுடைய உடம்பு உச்சியிலிருந்து உள்ளங் கால் வரையில் அவன் பட்ட அடிகளினால் வலி எடுத்துக் கொண்டிருந்தது.

பாடோலி ஒரு துக்கமான குரலில் பதில் கொடுத்தது. அம்மாதிரி இதுவரை எந்தக் காளையும் செய்ததாகப் பார்க்கவில்லை. ஆகவே அந்த மனிதப் பட்சிணிகளான தலைவனும் வீரர்களும் ஆச்சரியம் கொண்டார்கள். அது ஒரு மனிதக் குரல் மாதிரி சப்தமிட்டது. பாடோலி தனது தலையைப் பின்னால் சாய்த்து ஒரு துக்கமான முறையில் கத்தியது. அது கத்திய ஒவ்வொன்றையும் அவன் அறிந் திருப்பதாக அவர்கள் நினைத்தார்கள். அவர்கள் எங்கே போக வேண்டுமென்று சொன்னார்களோ அந்தத் திசை யைப் பார்த்து அவன் திரும்பினான். அதற்குப் பின்னால் கொஞ்சமும் தயக்கமில்லாமல் அந்தப் பாடோலி மந்தை கள் பின் தொடர அந்த வழியாகப் போனதைப் பார்த்த போது அவர்கள் எல்லோரும் ஆச்சரியம் கொண்டார்கள். அதன் பின்னால் அந்த மந்தையை ஓட்டுவதற்காக அவர்கள் கம்பை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படவே இல்லை. வெகு நேரம் வரையில் மௌனமாக எவ்வித மானச் சம்பவமும் நேராமல் அவர்கள் நடந்து கொண் டிருந்தார்கள்.

கிழக்கு வானம் சாம்பல் வர்ணமாக சூரிய உதயத்திற்கு முன்னால் தோன்றுவதைப் போல மாறியது. அச்சமயத்தில் அவர்கள் ஒரு ஆற்றை அடைந்தார்கள். அங்கே பாடோலி நின்று தன்னுடைய தாகத்தைத் தணிப்பதற்காகத் தண்ணீரைக் குடித்தது. அதன் பின்னால் எதையோ கேட்பதைப் போல தன் தலையைத் திருப்பியது. அதே சமயத்தில் தலைவனும், வீரர்களும் அந்தச் சப்தத்தைக் கவனித்தார்கள். வெகு தூரத்தில் கூச்சல்களையும் இரைச்சல்களையும் அவர்கள் கேட்டார்கள்.

மாகென்னுவைப் பற்றிக் கவலை கொண்டு அவனுடைய தந்தை அந்தக் கிராமத்திலுள்ள மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு மாகென்னுவைத் தேடுவதற்காகப் புறப்பட்டு வந்தார்கள். மாகென்னு தன்னுடைய மந்தையை மேய்த்துக் கொண்டிருக்கும் இடத்தில் வரும் பொழுது வெகு நேரமாகி விட்டது. அவர்கள் தங்கள் கைகளில் தீவட்டிகளை வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த வெளிச்சத்தில் அங்கு என்ன நடந்தது என்பதைக் கண்டு கொண்டார்கள். அங்கிருந்த ஒவ்வொரு புல்லின் அசைவிலும் என்ன நடந்தது என்பதைக் கண்டு கொள்ளும் விதமாக அவர்கள் அங்கேயே பிறந்து வளர்ந்திருந்தார்கள். எந்த இடத்தில் மாகென்னுவை அடித்தார்கள் என்பதைக் கண்டு பிடித்தார்கள். அந்த இடத்தில் ரத்தம் சிந்தியிருந்ததைக் கண்டு மாகென்னுவின் தந்தை, "என்னுடைய மகனைச் சாகிற வரையில் அவர்கள் அடித்துக் கொன்றுவிட்டு, என்னுடைய மாடுகளையெல்லாம் ஓட்டிக்கொண்டு போய் விட்டார்கள். நாம் அவர்களைப் பின் தொடர்ந்து பழிக்குப் பழி வாங்க வேண்டும்" என்று அவன் சொன்னான்.

மற்றவர்கள் பிரமாதமாக தங்களுடைய கோபத்தைக் காட்டுவதற்காக கோபக் கூச்சல் போட்டார்கள். உடனே அந்த மாடுகள் போன தடயங்கள் வழியாகப் புறப்பட்டார்கள். அந்த பூமி கடினமாய் இருந்தது. அவர்களுக்கு அந்தச் சூரியனின் வெளிச்சம் இருந்த போதிலும், கையில் உள்ள தீவட்டிகளின் வெளிச்சம் இருந்த போதிலும் அவர்களுடைய முன்னேற்றம் மெதுவாய்த் தான் இருந்தது. இருந்தாலும் அவர்களுடைய கூச்சலை அந்தப் பாடோலி

யும் மனிதப் பட்சிணிகளும் கவனித்துக் கேட்டார்கள். அச்சமயம் விடிகிற நேரமாய் விட்டபடியால் அவர்கள் துரத்தினார்கள்.

மாகென்னா பசியினாலும் வலியினாலும் பலவீனமாய் இருந்தான். அவனைப் பற்றியிருந்த இருவர்கள் பலமைல்கள் வரை அவனை இழுத்துக் கொண்டு போனார்கள். அவனுக்கு அந்த சப்தங்கள் கேட்டன. உடனே அவன் கூச்சலிட்டான்.

"பாடோலி, அவர்கள் நம்மைப் பின்னால் தொடர்ந்து வருகிறார்கள். காலையும் உதயம் ஆகிவிட்டது! இன்னமும் நாம் தப்பிப்பிழைக்கும் வழியிருக்கிறது" என்று சொன்னான்.

பாடோலி அதற்குப் பதிலாக மெதுவாகக் கத்தியது.

அந்த மனிதப் பட்சிணித்தலைவனுக்கு என்ன செய்ய வேண்டுமென்பது நன்றாய்த் தெரியும். உடனே அவன் தன்னுடைய ஆட்களுக்கு உத்தரவிட்டான்.

"அந்த மாடுகளை ஆற்றுக்குள் ஓட்டுங்கள். பின்னால் ஆற்றுக்கு எதிராக அவற்றை இரண்டு மைல் தூரம் நடத்திச் செல்லுங்கள். அங்கே பாறையான பூமி இருக்கிறது. அங்கே புதர்கள் எதுவும் கிடையாது. ஆகவே நாம் போவதில் சிரமம் எதுவும் இருக்க முடியாது. அவசரப்படுத்துங்கள். சூரியன் உதயமாவதற்குள்ளாக நாம் அவர்கள் பார்வையிலிருந்து தப்பிவிடவேண்டும்" என்று சொன்னான். உடனே அந்த மனிதப் பட்சிணிகள் மாடுகளை ஆற்றுக்குள் இறக்குவதற்காக அடிக்க ஆரம்பித்தார்கள். மீண்டும் பாடோலி நகர மறுத்தது. அது நின்ற இடத்திலேயே மற்ற மாடுகளும் சுற்றி நின்று கொண்டிருந்தன. அவைகளும் அசைய மறுத்தன.

அந்தத் தலைவனுக்கு மேலே என்ன செய்ய வேண்டுமென்பதும் தெரிந்திருந்தது.

"அந்தப் பையனை அடியுங்கள். அவனை உயிரோடு வைத்துக் கொண்டு அடியுங்கள். ஏனென்றால் நமக்கு இனியும் அவனுடைய உதவி வேண்டியதிருக்கலாம்" என்று அவன் உத்தரவிட்டான். இரண்டு வீரர்கள் மறுபடியும் மாகென்னாவைத் தரையில் தள்ளி அவர்கள் களைப்

படைகிற வரையில் அவனை அடித்தார்கள். அவனை அடித்து முடிந்ததும் அவனால் எழுந்து நிற்க முடியவில்லை. ஆகவே அவனை ஆற்றுக்கு அழைத்துப் போய் குறைவான தண்ணீர் இருந்த இடத்தில் தள்ளினார்கள். மாகென்னா அந்தக் குளிர்ந்த தண்ணீரில் படுத்திருந்தான். அவன் சாவதற்கு விரும்பினான். தாகம் அதிகமாய் இருந்தபடியால் தண்ணீரை அதிகமாய்க் குடித்தான். கடைசியாக அவனுக்கு மீண்டும் உடம்பில் தைரியம் ஏற்படுவதைப் போலத் தோன்றியது. அந்த வீரர்கள் அந்த ஆற்றிலிருந்து அவனை மீண்டும் வெளியே இழுத்துத் தலைவனுக்கு முன்னால் கொண்டுவந்து விட்டார்கள். “இப்போது நீ பாடு. நீ பாடாவிட்டால் நீ சாகிற வரையில் உன்னை அடிப்பார்கள். அதன் பின்னால் உன்னுடைய எலும்புகளை கழுகுகள் எடுத்துக்கொண்டு போகும்” என்று அந்தத் தலைவன் கூச்சலிட்டான்.

மாகென்னா மேலே இருந்த வானத்தைப் பார்த்தான். மேலே சாம்பல் வர்ண உதயத்திற்கு எதிராக உச்சிவானத்தில் இரண்டு சிறிய கறுப்புப் புள்ளிகள் வட்டம் இடுவதைக் கவனித்தான். அவனின் மரணத்தை எதிர்பார்த்து அதற்குள்ளாக கழுகுகள் அங்கே சுற்றி வட்டம் இட்டுக் கொண்டிருந்தன. ஆகவே அந்தத் தலைவன் சொல்லியது உண்மை யென்பதை அறிந்து கொண்டான். அதனால் அவன் பாட ஆரம்பித்தான். அவனுடைய குரலைக் கேட்டு இது வரை ஆச்சரியம் அடைந்தவர்கள் இப்போது அவனுடைய குரலைக் கேட்டார்களானால் அதிலிருந்து அவனை அடையாளம் புரிந்துகொள்ள முடியாது.

மீண்டும் பாடோலி தன்னுடைய தலையைப் பின்னால் தள்ளித் தள்ளி ஒரு துக்கமான கூச்சல் போட்டது. அப்புறம் அது தண்ணீருக்குள் இறங்கி அந்த மந்தையையும் ஆற்றுக்கு எதிராக நடத்திச் சென்றது. அந்த சப்தத்தை மாகென்னாவின் தந்தை கேட்டார்.

“அதுதான் வெள்ளைக் காளை பாடோலி. அது என்னுடைய மகனுக்காகத் துக்கப்படுகிறது. சீக்கிரமாகச் செல்லுங்கள். சீக்கிரமாகச் செல்லுங்கள். நாம் இப்போது சமீபத்தில் தான் இருக்கிறோம்” என்று அவன் கூவினான்.

உதவி செய்ய வந்த கூட்டமும் பசியினுல் களைத்துப் போயிருந்தது. ஏனெனில் அன்று முதல் நாளன்று நடுப் பகலிலிருந்து அவர்கள் எதுவும் சாப்பிடவில்லை. இருந்தாலும் தங்களுடைய தைரியத்தைத் திரட்டிக் கொண்டு முன் னேறினுர்கள். சூரியன் மேலே எழுந்தான். அச்சமயத்தில் அவர்கள் ஆற்றை வந்தடைந்தார்கள். அந்த ஆற்றைக் கடந்து அப்பக்கத்தில் ஏதாவது தடயங்கள் இருக்கிறதா என்பதைப் பார்த்தார்கள். ஆனுல் அங்கே எதுவும் தெரியவில்லை.

மாகென்னுவின் தந்தை அந்த ஆற்றை மேலும் கீழும் பார்த்தார்.

" அவர்கள் அந்த மாடுகளைத் தண்ணீர் வழியாக ஓட்டிப் போய் இருக்க வேண்டும். இந்த நதியைப் பாருங்கள். அகலமாகவும் இங்கே ஆழம் இல்லாமலும் இருக்கிறது. நாம் நதியின் இரண்டு கரைகளிலும் நதிக்கு எதிராகச் சென்று சோதிக்க வேண்டும். நதிக்குக் கீழாகவும் சோதிக்க வேண்டும். அப்படியானுல்தான் தடயங்களை நாம் கண்டு பிடிக்க முடியும்."

அந்த முயற்சி பிரயோசனம் இல்லாமல் போயிற்று. அவர்கள் பல மணி நேரங்கள் தேடியும் கூட அந்த இழந்து போன மந்தை அடையாளத்தையே கண்டுபிடிக்க முடிய வில்லை. பூமி விழுங்கியதைப் போல இருந்தது. கடைசியாக தங்களுடைய முயற்சியில் தோல்வி ஏற்பட்டதாக மாகென் னுவின் தந்தை ஒப்புக் கொண்டான். அவனும் அவனுடைய நண்பர்களும் சோர்வுற்று உற்சாகம் குன்றி சூரியன் அஸ்த மிக்கிற சமயத்தில் தங்களுடைய கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

இதற்கிடையில் அந்த மனிதப் பட்சிணிகள் அந்த மாட்டு மந்தையை ஆற்றுக்கு எதிராக ஓட்டிக்கொண்டு போனுர்கள். அவர்களோடு பாதி பிரக்ஞையிலிருந்த அந்த மாகென்னுவையும் இழுத்துக் கொண்டு போனுர்கள். பாறை பூமிக்கு அவர்கள் வந்ததும் ஆற்றிலிருந்து கரையில் ஏறினுர்கள். அந்த நதியின் தரை அந்த இடத்தில் செங்குத் தாகவும் உயரமாகவும் இருந்தது. ஒன்றும் முளையாத ஒரு குன்றில் அவர்கள் ஏறினுர்கள். அங்கிருந்து பெரிய

பெரிய மலைகளுக்குப் பாதை போய்க் கொண்டிருந்தது. சூரியன் அடி வானத்தில் கிளம்பியதும் அந்த மலைகளுக்கு மத்தியில் இருந்த அந்தக் கணவாயை அடைந்தார்கள். அதன் இருபுறங்களிலும் ஒரு பெரிய காடும் பெரிய பெரிய மரங்களும் இருந்தன. அந்த மரங்கள் மிகவும் உயரமாய் இருந்தன. அந்த மலைகளைப் போல அவைகளும் உயர மானவைகளே என்று தோன்றும்படி இருந்தன. அந்தக் காடு இருண்டிருந்தது. இந்தக் கூட்டம் அங்கே போய்ச் சேரும் போது அங்கிருந்து குளிர்ந்த காற்று அடித்துக் கொண்டிருந்தது. பாடோலி அங்கே நின்று சுற்றிப் பார்த்தது. அந்தச் சூரியன் வெகு தூரத்திற்குக் கீழே உள்ள ஆற்றின் மீது பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தினுல் அந்த நதியானது ஒரு பெரிய வெள்ளிப்பாம்பைப் போல பள்ளத்தாக்கிற்கு ஓடியது காணப்பட்டது. ஆனுல் இவர்களைக் காப்பாற்ற வேண்டிய கூட்டத்தை எங்கேயும் காண முடியவில்லை. பாடோலி தன்னுடைய நண்பனை மாகென்னுவை நோக்கியது. அவனை இன்னமும் இரண்டு மனிதப் பட்சிணிகள் இழுத்து வந்து கொண்டிருந்தார்கள். அவன் தப்புவதற்கான கடைசி சந்தர்ப்பமும் போய் விட்டது என்பதை உணர்ந்து கொண்டான். பாடோலி மெதுவாக, சோகமாகக் கத்தி விட்டு அந்தக் காட்டுக்குள் பாய்ந்தது.

அன்று பூராவாக அவர்கள் அங்கிருந்து கால்வாய்களை யும், பள்ளத்தாக்குகளையும் கடந்து போய்க் கொண்டிருந் தார்கள். இரவு வந்ததும் ஒரு இடத்தில் தங்கித் தூங்கினுர் கள். அவர்களைச் சுற்றிப் பெரிய பெரிய மரங்கள், பெரிய பெரிய பூதாகாரமான பூதங்களைப் போலக் காணப்பட்டன.

மாகென்னு மிகவும் களைத்துப் போய் இருந்தபடியால் உடனே ஆழ்ந்த தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான். அவ னுக்குக் களைப்பு மிகுந்திருந்தபடியால் அந்த மனிதப்பட்சிணி கள் கொடுத்த உணவுகளைச் சாப்பிட முடியவில்லை. செத்தவனைப் போல தூங்கிக் கொண்டிருந்தான்.

அந்த இரவு பூராவாக அந்த மாடுகளை இரண்டு மனிதப் பட்சிணிகள் காவல் காத்து வந்தார்கள். கடைசியாக அந்த இருண்ட குளிர்ச்சியான இரவு ஒரு முடிவுக்கு வந்தது.

அவர்களுக்கு மேலே வெகு தூரத்தில் வெளிச்சம் தெரிந்தது. அந்த வெளிச்சம் மரங்களின் உச்சி வழியாக வந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சம் அடித்த நாளில் சூரியன் உதயமாகும். மாகென்னுவைக் காத்து நின்றவர்கள் அவனை எழுப்பினார்கள். அவன் உணவை முதல் நாள் இரவு கொடுத்து உண்டு முடிகிற வரையில் அவனுக்குக் காவலாக இருந்தார்கள். உண்டு முடிந்ததும் எழுந்து தங்களுடன் நடக்கும்படி அவர்கள் சொன்னார்கள். அவன் எழுந்திருக்கவும் நடக்கவும் தன்னால் முடியுமென்பதைப் பார்த்து ஆச்சரியப் பட்டான். அவனுடைய உடம்பு இன்னமும் வலியினால் பதறிக் கொண்டிருந்தது. அவன் மிகவும் களைப்படைந்திருந்தபடியால் நிரந்தரமாகத் தூங்கிக் கொண்டிருக்க வேண்டி வந்துவிடுமோ என்று நினைத்தான்.

அந்தக் கூட்டம் அதிகாலையில் புறப்பட்டது. அவர்கள் அந்தக் காட்டிலிருந்து ஒரு பள்ளத்தாக்கிற்கு வரும் போது சூரியன் இன்னும் அதிகமாக மேலே வரவில்லை. அந்தப் பள்ளத்தாக்கின் மத்தியில் ஒரு பெரிய கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்திற்கு மத்தியில் ஒரு பெரிய வீடு இருந்தது. அந்த மனிதப் பட்சிணிகள் எதற்காக வந்து மாகென்னுவையும் அந்த மாடுகளையும் பிடித்தார்கள் என்பதை இப்போது அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

அந்தக் காட்டின் ஓரத்தில் அவர்கள் வந்ததும் அந்தக் கிராமம் உயிர் பெற்றது. பெண்களும், குழந்தைகளும் அவர்களைச் சந்திப்பதற்காகக் கோஷமிட்டுக் கொண்டும் பாடிக் கொண்டும் ஓடி வந்தார்கள். ஏனெனில் பல வாரங்களாக அவர்கள் உண்ணுவதற்கு மாமிசமே கிடைக்கவில்லை. அந்தக் கூட்டம் அந்தக் கிராமத்தில் வெற்றி முழக்கத்தோடு நுழைந்தது. பாடோலியும் மற்ற மந்தைகளும் இந்தக் கிராமத்திலிருந்த மாட்டுத் தொழுவத்தில் அடைக்கப் பட்டன. பின்னல் அந்தத் தலைவன் தனது மக்களைக் கூட்டி அவர்களிடம் பேசினன்:

"எனது மக்களே, இன்று நாம் வெற்றியோடு திரும்பியிருக்கிறோம். நூறு மாடுகளுக்கு மேல் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். ஒரு உயிரைக் கூட நாங்கள் இழக்கவில்லை. ஆகவே நீங்கள் மகிழ்ச்சியோடு இருக்கலாம்.

இன்று இரவு நாம் ஒரு காளையைக் கொன்று நம்முடைய வெற்றியைக் கொண்டாடுவதற்காக விருந்து செய்வோம். இந்தக் காளைகளில் அந்தப் பெரிய வெள்ளை கொம்பு இல்லாத காளை இருக்கிறது. அந்தக் காளை மந்திரத்தால் மயக்கப்பட்டது. ஏனெனில் அது அசைந்தால் ஒழிய மற்றது அசைவது இல்லை. அது கூவுவது மனிதக் குரலைப் போல இருக்கிறது. அதன் மேய்ப்பவன் பாடும் பொழுது சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் அறிந்து கொள்கிறது. அது அவன் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படி கிறது. அந்த ஒன்றைத்தான் நாங்கள் கொல்லவேண்டும். இனி அந்த மேய்க்கிறபையனைப் பொறுத்தவரையில் அவன் மெலிவாகவும், பரிதாபமாகவும் இருக்கிறான். அவனுக்கு நாம் நல்ல உணவு கொடுத்து அவனைக் கொழுக்க வைக்க வேண்டும். பின்னால் அவனையும் விருந்தாக உண் போம். இப்போது நீங்கள் போய் அந்த வெள்ளைக் காளை யைக் கொல்லுங்கள். அதன் மாமிசங்களைத் துண்டு துண்டாக வெட்டிப் பாத்திரங்களில் போட்டு சமையுங்கள். இன்று இரவில் நாம் விருந்து உண்போம்.''

அவன் பேசி முடித்ததும் அவன் சொல்லியபடி செய் வதற்காக வாலிபர்கள் அங்கிருந்து ஓடினார்கள். பெண்கள் சமையல் செய்வதற்காக தங்கள் குடிசைகளுக்குத் திரும் பினார்கள்.

மாகென்னு இப்போது தனியாய் இருந்தான். அவன் மிகுந்த களைப்படைந்திருந்தபடியால் அந்தத் தலைவனின் பேச்சில் ஒரு வார்த்தையைக் கூட அவனால் கிரகிக்க முடியவில்லை. ஆகவே அந்தக் கூட்டம் நடந்து கொண் டிருந்த இடத்திற்கு ஓரமாய் உள்ள ஒரு பெரிய மரத்தின் நிழலுக்கு ஊர்ந்து சென்றான். அங்கே போனதும் அவன் அயர்ந்து தூங்கி விட்டான்.

அந்த வாலிபர்களால் பாடோலியைக் கொல்ல முடிய வில்லை. சுலபமாகக் கொன்று விடலாமென்று அவர்கள் நினைத்தபடி நடக்கவில்லை. அவர்கள் வருவதைப் பார்த்த வுடன் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை அறிந்து கொண்டதைப் போல அந்த வெள்ளைக் காளை தோன்றியது. திடீரென்று பலமாகக் கத்தி அந்த மாடு தொழுவத்துக் குள்ளாகச் சுற்றி சுற்றி ஓட ஆரம்பித்தது.

அது அப்படி ஓடியதைப் பார்த்ததும் மற்ற மாடுகள் பீதியடைந்து எல்லா திசைகளிலும் நோக்கி ஓட ஆரம்பித்தன. தங்களுக்கு எதிரே எது வந்தாலும் அவற்றை சமட்டிச் சென்று கொண்டிருந்தன. சில சமயங்களில் அந்த வீரர்களில் பலர் குத்திக் கிழிக்கப்பட்டோ அல்லது கால்களில் சமட்டி செய்யப்பட்டோ போனார்கள். மீதமுள்ளவர்கள் கயிறுகொண்டு அதைக் கட்ட முயற்சித்தார்கள். புல்லினால் செய்யப்பட்ட ஒரு நீளமான கயிறை அவர்கள் தயார் செய்து அதன் முனையில் ஒரு சுருக்கு போட்டு அந்தச் சுருக்கை பாடோலியின் தலையில் போட முயற்சித்தார்கள். அவர்கள் என்னதான் செய்தபோதிலும் அந்தச் சுருக்கு வேறு ஒரு காளையின் கழுத்தில்தான் விழுந்து வந்தது. பாடோலி எப்போதும் போல சுதந்திரமாய் இருந்தது. ஒரு தடவை அவர்கள் அதன் கழுத்தில் அந்தச் சுருக்கை விழும்படிச் செய்தார்கள். ஆனால் அந்தச் சுருக்கு கழுத்தில் மாட்டியதும் அவர்கள் கயிற்றை இழுத்தபோது அந்தக் கயிறு அறுந்து போயிற்று. பாடோலி முன்னால் செய்ததைப் போலவே அந்தத் தொழுவத்தைச் சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தது.

கடைசியாக அந்த வீரர்கள் அந்தக் கிராமத்திலிருந்த எல்லாப் பெண்களையும் எல்லா வாலிபர்களையும் தங்களுக்கு உதவி செய்யும்படி அழைத்தார்கள். கடைசியாக அவர்கள் மற்ற மாடுகளை ஒரு மூலையில் சேர்ந்திருக்கும்படிச் செய்து பாடோலியைத் தனியாய்ப் பிரித்தார்கள். அவர்கள் அதை நோக்கிச் சென்றபோது அது அவர்களை நோக்கி ஓடி வந்து அதன் பின்னால் அந்தத் தொழுவத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்த உயரமான முள்வேலியை ஒரே தாவில் தாவியது. அதைப் பிடிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிற கூட்டம் முழுவதும் அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு நின்றது. அம்மாதிரி ஒரு உயரமான வேலியை ஒரு காளை தாவியதை அவர்கள் அது வரையில் பார்த்தது இல்லை யென்றாலும் அவர்கள் தங்களைச் சுதாரித்துக் கொண்டு அந்த வேட்டையை மீண்டும் ஆரம்பித்தார்கள்.

இச்சமயத்தில் அந்தக் கிராமத்திலிருந்த ஒவ்வொருவரும் இதில் கலந்து கொண்டிருந்தார்கள். ஆனால் பாடோலி களைப்பு அடைந்ததாகவே தோன்றவில்லை. அந்தக் கிராமத்

தில் உள்ள குடிசைகளில் ஒன்றுக்குள் நுழைந்து வெளியே வருவதும், இன்னொன்றில் நுழைவதுமாய் இருந்தது. அதற்குச் சமீபத்தில் ஒருவராலும் போக முடியவில்லை. அந்தக் கிராமவாசிகள் தங்களுடைய ஈட்டிகளை அதன் மீது மிகுந்த சாமர்த்தியத்தோடு வீசியபோதிலும் அதைக் காயப் படுத்த முடியவில்லை. அவர்களுடைய ஈட்டி வீச்சு ஒன்று குறி தவறிப் போகலாம்; அல்லது அந்த ஈட்டிகள் அதன் மீது போய்த் தொட்டதும் ஒரு வாத்தின் முதுகி லிருந்து தண்ணீர் எப்படி வழுக்கி விழுமோ அதே மாதிரி வழுக்கி விழுவதாய் இருக்கும்.

கடைசியாக அந்த வீரர்கள் அதைரியம் கொண்டு தங்கள் தலைவனிடம் சென்று நடந்த விஷயங்களைக் கூறினார்கள்.

"அந்த மேய்ச்சல் சிறுவனை என்னிடம் கொண்டு வாருங்கள்" என்று அவன் கூச்சலிட்டான்.

மாகென்னு தூங்கிக் கொண்டிருந்தான். அவனை எழுப்பி முரட்டுத்தனமாகத் தலைவனிடம் இழுத்துச் சென்றார்கள்.

"நான் உனக்குக் கொடுத்த அடி போதாதா? இன்ன மும் நீ அந்த வெள்ளைக் காளையை மந்திரத்தால் மயக்கம் செய்து கொண்டிருக்கப் போகிறாயா? இப்போது பேசு. நீ அந்தக் காளையிடம் அது அகப்பட்டுக் கொள்ளும்படிச் சொல்லு. அல்லது உன்னைக் கொல்லும்படி நான் உத்தரவு கொடுப்பேன்."

மாகென்னு தனக்கு வந்த கொட்டாவியை அடக்கு வதற்கு முயற்சி செய்தான்.

"ஓ பெரிய தலைவனே, நான் தூங்கிக் கொண்டிருக் கிறேன். என்னுடைய கண்களால் சரியாகப் பார்க்க முடிய வில்லை. என்னுடைய காதுகளால் சரியாகக் கேட்க முடிய வில்லை. என்னுடைய கால்களால் நிமிர்ந்து நிற்க முடிய வில்லை. இப்போது நான் என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்? நான் அதைச் செய்து முடித்ததும் என்னை நிம்மதியாகத் தூங்க விடும்படி நான் உம்மைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் நான் மிகுந்த களைப்பாய் இருக்கிறேன்" என்று மாகென்னு சொன்னான்.

"உன்னுடைய அந்த வெள்ளைக் காளையைப் பற்றி நான் சொல்கிறேன். அது பிடிபடும்படி அதனிடம் பாட்டுப் பாடி நீ சொல்வாயாக. அல்லது என்னுடைய வீரர்களிடம் சொல்லி உன்னைக் கொல்லச் செய்வேன்.''

ஆகவே தூக்கக் கலக்கத்தோடு மாகென்னு பாடினன். அவன் என்ன சொன்னன் என்பது அநேகமாய் அவனுக்குத் தெரியாது.

அவனுடைய குரல் வெடு வெடுப்பாய் இருந்தது. அந்தப் பாட்டின் முடிவில் அவனுடைய குரல் மிகவும் மெது வாய்த் தணிவான குரலில் இருந்ததால் அவனுக்குப் பக்கத் தில் இருந்தவர்களால் கூடக் கேட்க முடியவில்லை. ஆனல் எல்லாம் பாடோலிக்குக் கேட்டது. மாகென்னுவின் முதல் குரல் வெளியே வந்ததும் பாடோலி அதைக் கேட்டு அசை யாமல் நின்றது. தன்னுடைய தலையை நிமிர்த்தி ஒரு பக்க மாகச் சாய்த்துக் கவனித்துக் கேட்டது. ஓடிப் போக வேண்டுமென்ற நினைப்பு அதற்குப் போயிற்று. அந்தக் கூட் டத்தின் தலைவன் அந்தக் காளையை மந்திரத்தால் மயக்கி இருப்பதாகச் சொன்னபடியால் இப்போது என்ன நடக்கப் போகிறது என்பதை ஆச்சரியத்தோடு ஒவ்வொருவரும் பார்க்க விரும்பினர்கள். முதல் அடியிலிருந்து கடைசி வரையில் பாடோலி கவனித்துக் கேட்டது. அதன் பின்னல் ஒரு வினடி எல்லாம் அமைதியாய் இருந்தது. கூர்மையாக—ஜாக்கிரதையோடு அந்த வெள்ளைக் காளை தனியாய் இருந்து வந்தது. இப்போது அந்த ஜாக்கிரதை மறைந்தது, அது தளர்ந்து நின்று கொண்டிருந்தது. அதனுடைய பிரும்மாண்டமான தலை மெதுவாகக் கீழே குனிந்தது. அதைப் பார்ப்பதற்கே இப்போது மிகவும் இரக்கமாய் இருந்தது. உடனே முன்னல் செய்ததுபோல தன்னுடைய தலையைத் திடீரென்று பின்னல் சாய்த்து மனம் உருகக் கூடியவாறு கதறியது. அந்தக் கதறல் துக்ககரமாக அதைச் சுற்றியிருந்த மலைகளில் எதிரொலித்தது. அந்த எதிரொலி மறைந்து போகவே மீண்டும் அமைதி ஏற்பட்டது. அந்த அமைதி—மனதை அழுத்துவதாய் இருந்தது.

பாடோலியைத் தவிர வேறு ஒருவரும் அசையவில்லை. அது மெதுவாக நடந்து அந்தத் தொழுவத்திற்கு தனியாகப் போயிற்று. அந்த முள் வேலியை அடைந்ததும் மீண்டும்

முன்போலவே வெகு சுலபமாகவே அதைத் தாண்டியது. அதன் பின்னுல் அந்தத் தொழுவத்தின் மத்தியில் தன்னுடைய இடத்தில் தன்னைப் பிடிப்பதற்காகவும் கொல்வதற்காகவும் காத்துக் கொண்டிருப்பதைப்போல நின்று கொண்டிருந்தது. மற்ற மாடுகள் அதனிடம் இருந்து எவ்வளவு தூரம் தள்ளியிருக்க முடியுமோ அவ்வளவு தூரம் தள்ளி நின்றது. அந்த மனிதப் பட்சிணிக் கூட்டத்தார் இந்தக் காட்சியைக் கண்டு மூச்சுவிட முடியாமல் மலைத்துப் போய் நின்ருர்கள். அவர்களில் பலர் பாடோலியை உயிரோடு விட்டு வைப்பதற்கு மிகுந்த பிரியமுள்ளவர் களாகக் காணப்பட்டார்கள். ஆனுல் தலைவன் உத்தரவு கொடுத்து விட்டபடியால் அதன்படி நடந்தாக வேண்டும். கடைசியாக ஜாக்கிரதையோடு இரண்டு வீரர்கள் பாடோலி யிடம் நெருங்கினுர்கள். ஒருவன் அதனுடைய தலையில் கயிற்ருல் சுருக்கை மாட்டினுன். இன்னெருவன் அதை ரொம்ப வேகமாக இழுத்துத் தன்னுடைய பக்கத்தில் கொண்டு வந்தான். பக்கத்தில் நின்றவன் தயாராய் தன் கையில் வைத்துக் கொண்டிருந்த ஈட்டியை அந்த பாடோலி யின் பனி வெள்ளையான கழுத்தில் ஆழமாகப் பாய்ச்சினுன். இந்தவிதமாகப் பாடோலி என்ற காளை இறந்தது.

இந்தச் செய்கைகளை யெல்லாம் மாகென்னு பார்க் கவோ அல்லது கேட்கவோ இல்லை. அவன் தன்னுடைய பாட்டைப் பாடி முடித்ததும் மீண்டும் அந்த மர நிழலுக்குப் போய் கீழே சுருண்டு விழுந்தான். அவனுடைய உடல் பூமியில் விழுவதற்கு முன்பாகவே அவனைத் தூக்கம் பற்றிக் கொண்டது. பாடோலியையும், அந்த மனிதப் பட்சிணி களையும், அவனுடைய பெற்ருேர்களையும் பற்றிய நினைப்பு கள் எல்லாம் அவனுக்கு இப்போது தோன்றவில்லை. அவ னுடைய உடம்பில் ஏற்பட்டிருந்த வலிகள்கூட அவனுக்குத் தோன்றவில்லை.

பாடோலி இறந்ததும் அந்தக் கிராமம் மீண்டும் உயிர் பெற்றது. அந்தக் காளையைத் தோல் உரித்து அதனுடைய மாமிசத்தை வெகு சீக்கிரமாகத் துண்டு துண்டாக வெட்டி ஞர்கள். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் எல்லா திசைகளிலிருந்தும் கூடினுர்கள். அந்தக் கூட்டம் கூடி யிருந்த இடத்தில் கட்டைகளை அடுக்கி ஒன்றுக்கு மேல்

ஒன்ருக பல நெருப்பு மூட்டங்களைச் செய்தார்கள். மூன்று கால்கள் உள்ள பெரிய பெரிய பாத்திரங்கள் வைக்கப் பட்டன. அந்தப் பாத்திரங்களில் தண்ணீர் விடப்பட்டிருந்தது. பாடோலியின் அழகான வெள்ளைத் தோல் கீழே விரிக்கப்பட்டு காய்வதற்காக முளை அடிக்கப்பட்டிருந்தது. அதனுடைய மலைபோன்ற மாமிசத்தை அந்தப் பாத்திரங்களில் போட்டார்கள். அந்த வேலை முடிந்ததும் அவர்களுடைய நடமாட்டங்களும் நின்றன. ஒரு பாத்திரத்துக்கு ஒருவர் வீதம் அந்த மாமிசத்தைக் கிளறிக் கொடுப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்தார்கள். ஒரு சிறிய பையன் அவர்களுக்குப் பக்கத்தில் நெருப்புக் கோட்டையை எடுத்துக் கொடுப்பதற்காக அமர்த்தப் பட்டிருந்தான். அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மற்றவர்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி நின்று விருந்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அந்த ஆச்சரியமான காளையின் அதிசயங்களைப் பற்றியும் அந்த மேய்ச்சல் சிறுவனின் பாட்டிற்குப் படிந்ததைப் பற்றியும் கடைசியாக அவனைக் காப்பாற்றுவதற்காக தன்னைக் கொல்லுவதற்கு அது எப்படி நடந்து கொண்டது என்பதைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது அந்தச் சமையலின் நறுமணத்தை மூச்சினுல் இழுத்து அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வாரங்கள் கணக்காக மாமிசங்களைச் சாப்பிடவில்லை.

ஒரு வேளை இந்த வாசனை மாகென்னுவின் தூக்கத்தைக் கலைத்திருக்கலாம். ஏனெனில் அவனுடைய பசியானது இப்போது அவனை எழுப்பி விட்டது. அவன் திடீரென்று எழுந்து உட்கார்ந்து அந்த வாசனையை மூச்சை இழுத்துப் பார்த்தான். அவன் மிகுந்த ஆழ்ந்த தூக்கத்தில் இருந்ததால் அவன் எங்கே இருக்கிருன் என்பதை ஒரு விஞடி அவனுல் புரிந்து கொள்ள முடியவில்லை. 'ஆஹா நல்ல விருந்து. நான் உண்மையிலேயே பசியோடு இருக்கிறேன்' என்று அவன் நினைத்தான்.

அவன் எழுந்து தன்னுடைய உடம்பை நிமிர்த்திச் சுற்றிலும் பார்த்தான். அங்கே கண்ட காட்சிகள் அவனுக்குப் பழக்கம் இல்லாதவையாய் இருந்தன. ஏதோ ஒரு அதிருப்திகரமான நினைப்பு அவன் மனதில் தோன்றி

யது. அவன் உடம்பில் தோன்றிய வலிகள் பழைய கதையை அவனுக்கு நினைப்பூட்டின. உடனே அவனுடைய மகிழ்ச்சியெல்லாம் துக்கமாய் மாறின. அவனுடைய முதல் நினைப்பு பாடோலி பற்றியதுதான். அவன் அந்த மரத்தின் பின்னலிருந்து ஜாக்கிரதையோடு அங்கே பாடோலிக்கு என்ன நடந்தது என்பதைக் கவனிக்க முயற்சி செய்தான். அங்கிருந்த காட்சி முழுவதையும் அவனுடைய அகன்ற பீதியைக் கொண்ட கண்கள் பார்த்தன. கூட்டம் கூட்டமாக மனிதப் பட்சிணிகள் பசியோடு காத்துக் கொண்டிருந்தார்கள். பானைகள் நெருப்புகளின் மேல் வைக்கப்பட்டிருந்தன. ஒரு பெரிய வெள்ளைக் காளையின் தோல் அங்கே விரிக்கப்பட்டு முளை அடிக்கப் பட்டிருந்தது. உடனே மாகென்னுவால் நிற்க முடியவில்லை. தனக்கு ஆதரவாக அந்த மரத்தைப் பிடித்துக் கொண்டான். ஆகவே அவர்கள் பாடோலியைக் கொன்று விட்டார்களோ என்று நினைத்தான். அந்தச் சமையல் வாசனை பாடோலியினதுதான் என நினைத்தான். திடீரென்று சில நிமிஷங்களுக்கு முன்னல் அவன் கொண்ட மகிழ்ச்சியை, அதன் மணமானது இப்போது அவனுக்கு குமட்டல் செய்யும்படியாக மாறியது.

கொஞ்சம் கொஞ்சமாக பாடோலிக்குப் பாடிய பாட்டைப் பற்றிய நினைப்பு இப்போது தோன்றியது. எல்லாம் தன்னுடைய தவறுதான் என்று நினைத்தான். தன்னுடைய நண்பனுக்கு—தனக்கு உயிர் கொடுத்து தன்னைக்காப்பாற்றிய நண்பனுக்கு—இந்தத் துரோகம் செய்துவிட்டதாக நினைத்தான். அவனுடைய துக்கத்தை அவனல் தாங்க முடியவில்லை. அவன் உயிரோடு இருக்க இப்போது விரும்பவில்லை. தள்ளாடித் தள்ளாடி மெதுவாக நடந்து அந்தப் புதருக்குப் பக்கத்தில் போய்ச் சேர்ந்தான்.

அவன் இது வரையில் உகாதியை விட்டுப் பிரிந்திருந்தது இல்லை. அந்த உகாதி இன்னமும் அந்த மஞ்சள் கம்பளியில் சுற்றி வைக்கப் பட்டிருந்தது. அவன் அதைத் தன்னுடைய கையில் பலமாய்ப் பற்றியிருந்தான். அவனை அடிக்கும்போதும், அவனை நதிவழியாக இழுத்துக் கொண்டு போன போதும், அவன் தூங்கிய போதும்கூட அதை விடவில்லை. ஒரு தடவை கூட அவன் அதை மறந்து கைவிட்டதில்லை. ஆகவே, அவனுக்கு ஏற்பட்ட அந்த

துக்ககரமான நேரத்தில் அவன் தன்னுடைய நண்பனுன உகாதியிடம் திரும்பினுன். அவன் அந்தப் புதருக்குப் பக்கத்தில் போய்ச் சேர்ந்ததும் பின்னுல் திரும்பி அந்தக் கிராமத்தைப் பார்த்தான். அவர்கள் கொட்டுகளின் தாளங்களுக்குத் தக்கபடி பாடிக்கொண்டும் ஆடிக் கொண்டும் இருந்தார்கள். அந்த வேலையில் அவர்கள் மும்முரமாய் இருந்தபடியால் இவனைப்பற்றிக் கவனிப்பார் யாரும் இல்லை. ஆகவே இன்னும் சிறிது தூரம் அந்தப் புதருக்குள்ளேயே போய் அங்கே அந்த உகாதியை வாசிப்பதற்காகக் கீழே படுத்தான். அவன் இருக்குமிடத்தை இப்போது ஒருவராலும் காணமுடியாது.

ஜாக்கிரதையோடு அந்த உகாதியைக் கம்பளியிலிருந்து வெளியே எடுத்து அந்த நாணலை தன்னுடைய தலை முடியிலிருந்து எடுத்து சில ராகங்களைப் பாடினுன். திடீரென்று அவன் பாடுவதை நிறுத்தினுன். அவனுடைய முகம் ஒரு புதிய எண்ணத்தினுல் பிரகாசம் அடைந்தது. மீண்டும் அவன் மெதுவாகவே மனோராஜ்யத்திடம் தன்னுடைய நினைப்புகளுக்கு ஒத்ததாக அந்த வாத்தியத்தை வாசித்தான். அந்த நினைப்பு அவன் மனதில் இப்போது தெளிவாகக் காண ஆரம்பித்தது. அதன் பின்னுல் அவன் வரவர வேகமாக வாசித்தான்.

அவன் உள்ளக் கிளர்ச்சிகளைக் கெடுத்து அவன் வாசித்து வந்த இந்த சங்கீதத்தை அந்த மனிதப் பட்சிணிகள் கேட்டிருப்பார்களானுல் அவர்கள் பீதியடைந்து ஜாக்கிரதையாக இருந்திருப்பார்கள். ஆனுல் தங்களுடைய பாட்டுகளிலும், நடனங்களிலும் வரப்போகும் விருந்திலும் அவர்கள் ஆழ்ந்திருந்தபடியால் இதைக் கவனிக்கவில்லை.

சூரியன் மேலே வந்து விட்டான். குடுக்கை குடுக்கையாக மது தயார் செய்யப்பட்டது. விருந்து தயாராய் விட்டது என்று தலைவனிடம் சொன்னுர்கள். அச்சமயம் ஒரு ஒலி கேட்டது.

“ஆஹாய்! நான் சொல்வதைக் கேட்பதற்கு அங்கே ஒருவரும் இல்லையா?” என்று அந்த ஒலி கேட்டது.

அவர்கள் அந்த ஒலி வந்த திசையை நோக்கினுர்கள். அங்கே ஒரு மலையின் உச்சியில் ஒரு உருவம் நின்று தன்னுடைய கைகளை ஆட்டிக் கொண்டிருந்தது.

"ஆஹாய்! அங்கே நமது விரோதிகள்பெரும் கூட்டமாக வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஆயுத பாணிகளாக இருக்கிறார்கள். அவர்கள் இழந்த இந்தக் காளைகளை மீண்டும் பற்றிக்கொண்டு போய் விடுவார்கள். ஆஹாய்! அங்கே நீங்கள் எல்லோரும் கோழைகளா? அல்லது நீங்கள் உங்களுடைய மாட்டு மந்தைகளையும், பெண்களையும், குழந்தைகளையும் காப் பாற்றப் போகிறீர்களா?" என்று அந்தக் குரல் ஒலித்தது.

அந்த உருவம் மறைந்தது. அங்கிருந்த மனிதப் பட்சிணிகள் பீதியோடு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தங்களைத் தொடர்ந்து வந்த கூட்டத்தை அப்போது தான் அந்தத் தலைவன் நினைவு கூர்ந்தான். அவர்கள் எப்படிக் காலடித் தடயங்களைக் கண்டு பிடித்தார்கள் என்று ஆச்சரியப்பட்டான். ஆனால், இப்போது அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருப்பதற்கு அவகாசம் இல்லை. இப்போது உடனே நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

"ஆஹாய் அங்கே" என்ற குரல் மூன்றாவது தடவை யாகக் கேட்டது. "இந்த வழி நீங்கள் எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் கிழக்கே இருந்து திரும் பினீர்கள். ஆனால் எதிரிகளோ, மேற்கே யிருந்து வருகிறார்கள். இப்போது ஓடுங்கள். அவர்களை அந்தக் கணவாயில் பிடித்து விடலாம். ஆஹாய்! அங்கே வேகமாக ஓடுங்கள்; வேகமாக ஓடுங்கள்."

அந்தக் கிராமம் பூராவாகவும் குழப்பத்தில் இருந்தது. தலைவன் உத்தரவு கொடுத்தான். வீரர்கள் ஆயுதங்களைத் தரித்துத் கொண்டு அங்கிருந்த புதர்களில் சிறு சிறு கூட்டங் களாக மறைந்தார்கள். அந்தக் கணவாயை அடைந்ததும் அங்கிருந்து வெளிப்படும் எதிரியைப் பிடிக்க வேண்டு மென்று அவர்கள் நினைத்தார்கள். பெண்களும் குழந்தை களும் வீட்டிலுள்ள சாமான்களை எடுத்துக் கொணடு இன்னொரு பக்கமாகக் காட்டுக்குள் ஓடி மறைந்தார்கள். இவர்கள் ஒரு மனிதப் பட்சிணிகளின் கூட்டத்தாராகையால் திருடியும், கொள்ளையடித்துமே தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். ஆகவே அவர்கள் தங்களைத் திட

ரென்று தாக்குவார்கள் என்பதற்கும் தயாராகவே இருந்தார்கள். சில நிமிஷங்களில் அந்தக் கிராமம் பூராவாக காலியாய் விட்டது. ஒரே ஒரு வயதான மனிதன்தான் தங்கி நின்ருன். அவன் தான் அந்தச் சமையல் பாத்திரங்களைக் கவனித்துக்கொண்டும், நெருப்பு எரிவதைக் கவனித்துக் கொண்டும் அவர்கள் எல்லோரும் திரும்பி வந்த பின்பு அவர்களுக்கு விருந்து செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டும் இருந்தான்.

கிராமத்தில் எல்லாம் அமைதியாய் இருந்தது. திடீரென்று ஒரு மஞ்சள் கம்பளத்தைத் தன் கையில் பிடித்துக்கொண்டு ஒரு பையன் அங்கே வந்து அந்த வயோதிகன் முன்பு உட்கார்ந்தான்.

“வணக்கம் தாத்தா. கிராமத்தில் இன்று ஒவ்வொன்றும் அமைதியாய் இருக்கிறது” என்று சொன்னுன்.

அந்தப் பையனை அந்த வயோதிகன் இதற்கு முன்பு பார்த்தது இல்லை. ஆனுல் அவன் மிகுந்த மரியாதையாக இருந்த படியால் அந்தச் சிறுவனைப் பார்த்து அந்தக் கிழவன் புன்னகை காட்டினுன்.

“ஆமாம், எல்லாம் இப்போது மிகுந்த அமைதியாய் இருக்கிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் பாட்டும் ஆட்டமும் ஆரம்பமாகும். வீரர்கள் சீக்கிரமாக வீடுகளுக்குத் திரும்புவார்கள். அப்போது அவர்களுக்கு விருந்தளிக்கப்போகிருேம். நீ அதுவரை தங்கியிருப்பாயானுல் எங்களுடன் நீயும் விருந்து உண்ணலாம்” என்று அந்தக் கிழவன் சொன்னுன்.

அந்தச் சிறுவன் வாசனையை மூக்கினுல் இழுத்தான்.

“வாசனை வெகு நன்ருய் இருக்கிறது. நான் மிகுந்த பசியோடு இருக்கிறேன். வெகுதூரம் நான் போக வேண்டும். என்னுல் காத்திருக்க முடியாது” என்று அவன் சொன்னுன். அவன் மீண்டும் அந்த வாசனையை மூக்கினுல் இழுத்தான். “இந்த மணம் மிகுந்த நன்ருய் இருக்கிறது. கிராமத்தில் ஏதாவது எனக்கு உண்ணுவதற்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன்” என்று சோர்வோடு அவன் கூறினுன்.

அந்தக் கிழவன் தயங்கினன்.

"எனக்கும் கூட பசியாய்த்தான் இருக்கிறது. ஆனல் அவர்கள் வருவதற்கு முன்பாக நாம் உண்ண ஆரம்பிப்பது நன்ருய் இருக்காது. அவர்கள் கண்டு பிடித்து விட்டால் என்னை அடித்துப் போட்டு விடுவார்கள்." பையன் சிரித்தான்.

"ஆனல் தாத்தா, இங்கே அநேக பானைகள் இருக்கின்றன. ஒரு முழுக் காளையை நீங்கள் சமைத்திருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது. ஆகவே நாம் ஒவ்வொன்றிலும் கொஞ்சம் எடுத்துண்பதால் அவர்கள் நம்மைக் கண்டு பிடித்துவிட முடியாது" என்ருன்.

அந்தக் கிழவன் மீண்டும் தயங்கினன். அந்த யோசனையைக் கேட்டு அவனுடைய உதடுகளை நக்கிக் கொண்டான்.

"வாரும் தாத்தா." அந்தச் சிறுவன் மேலும் பேசினன். "நான் உமக்குச் சிறிது மாமிசம் தருகிறேன். மற்றவர்களால் இதைக் கண்டு பிடிக்க முடியாது."

அந்தக் கிழவன் மீண்டும் தன்னுடைய பற்கள் இல்லாத ஈறுகளின் மீது தனது நாக்கை ஓட்ட விட்டான்.

"இப்போது எனக்குப் பற்கள் இல்லை. என்னல் அந்த மாமிசத்தை உண்ண முடியாது. ஆனல் கொஞ்சம்—கடுகு எனக்கு எடுத்துக் கொடுத்தால் அதுவே எனக்குப் போதும்."

கடைசியாக அந்தக் கிழவனின் காலியாய் இருந்த வயிறு வெற்றி பெற்றது.

மாகென்ன கொழுப்பு கலந்த கடுகை எடுத்து அந்தக் கிழவனுக்குக் கொடுத்தான். அவன் அதை மிகுந்த ஆவலோடு குடித்து விட்டு தன்னுடைய உதடுகளைச் சப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"இப்போது இந்தக் கொழுப்புக் கடுகை உள்ளே தள்ளுவதற்குக் கொஞ்சம் பீர் சாப்பிட்டால் நல்லது தாத்தா" என்று மாகென்ன ஆசை காட்டும்படி சொல்லி அந்தக் கிழவனுக்கு ஒரு பெரிய குடுக்கை நிறைய மதுவைக் கொடுத்தான்.

"நீ எல்லாவற்றையும் நன்ருய் யோசித்துப் பார்க்கிருய். மிகுந்த புத்திசாலித்தனமும் பணிவும் உன்னிடம் இருக்கிறது. உனக்கு உண்பதற்கு வேண்டியதை எடுத்துக்கொள். மறந்து விட மாட்டாய் என்று நம்புகிறேன்."

"என்னைப் பற்றி நீர் கவலைப்பட வேண்டாம். நீர் சாப்பிட்டு முடிந்த பின்பு நான் சாப்பிடுவதற்கு நிறைய அவகாசம் இருக்கும். ஆமாம், ஆமாம்! இன்னும் ஏராளமாய் அவகாசம் இருக்கிறது."

"உணவும் ஏராளமாய் இருக்கிறது. இந்த முழுக் காளை மாட்டு மாமிசத்தில் நாம் இருவரும் சாப்பிடுவதால் எதுவும் குறைந்து விடாது. ஒருவருக்கும் தெரிந்து விடாது. இன்னும் ஒரு கலயம் அந்தக் கொழுப்பு கலந்த கடுகு எனக்குக் கொடுப்பாயாக."

இம்மாதிரியாக காரியங்கள் நடந்து கொண்டிருந்தன. கலயம் கலயமாக அந்தக் கொழுப்பு கலந்த கடுகைக் கிழவன் குடித்துக் குடுக்கை குடுக்கையாக மதுவையும் குடித்துக் கொண்டிருந்தான். அவனுடைய வயிறு பிரமாதமாய் ஆயிற்று. எந்த விளுடியும் அது வெடித்து விடலாம் என்று தோன்றியது.

"ஒரு சிறந்த விருந்து தாத்தா. இப்போது ஒரு பாட்டு பாடட்டுமா? ஆனல் பாடல்கள் உமக்குக் கொஞ்சம் தெரியும் என்று நான் நம்புகிறேன்."

"ஆமாம், எனக்கு சில நல்ல பாட்டுகள் தெரியும்" என்று அந்தக் கிழவன் கூறினுன். அச்சமயம் அவன் வயிறு நிறைந்தது மட்டுமல்ல; ஏராளமாகக் குடித்தும் இருந்தான். "ஆமாம், எனக்கு சில நல்ல பாட்டுகள் தெரியும். இந்தப் பாட்டைக் கவனி. இந்தப் பாட்டை நீ கேட்டால் நிச்சயமாகச் சிரிப்பாய்."

அவன் தன்னுடைய வாயை அகலமாய்த்திறந்தான். ஆனல் சப்தம் ஒன்றும் வெளியே வரவில்லை. ஏதோ கொஞ்சம் காற்று தான் வெளியே வந்தது.

"என்னுடைய தொனி போய் விட்டது குமாரனே. என்னுடைய வயிறு பூர்ணமாய் இருப்பதால் என்னுல் பாட

முடியாது. அதற்குப் பதில் நீ எனக்காகப் பாடுவாயாக'' என்றான்.

அவன் எவற்றையெல்லாம் கேட்க விரும்பினானோ அவற்றை யெல்லாம் கேட்டு விட்டான். அந்தக் கிழவனைப் பற்றி அதற்கு மேல் கவலைப்பட வேண்டியதில்லை யென்று உணர்ந்தான். ஒரு பாத்திரத்தில் அங்கிருந்த பாடோலியின் மாமிசங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து அந்தப் பாத்திரத்தின் தோல்மீது கொட்டினான். அந்தக் கிழவன் எழுந்திருப்பதற்கு முயன்றான். பரிதாப கரமாகக் கைகளையும், கால்களையும் ஆட்டினான். கத்து வதற்கு முயற்சி செய்தான். ஆனால் அவனிடமிருந்து சிறிதுகூட சப்தம் வெளியே வரவில்லை. அந்தக் கிழவன் மாகென்னா செய்வதைப் பார்ப்பதற்காக முயற்சி செய் தான். ஆனால் அவனுடைய முயற்சிகள் ஒன்றும் பலிக்க வில்லை. அப்படியே கீழே சாய்ந்து அந்தக் கொழுப்பு கலந்த கடுகையும், மதுவையும் வாந்தி செய்து கொண்டிருந்தான். பின்னால் அவன் அசைவற்று பிரக்ஞை இழந்து படுத்து விட்டான்.

எல்லா மாமிசங்களையும் பாடோலியின் தோலில் கொண்டு வந்து கொட்டுகிற வரையில் மாகென்னா தன் வேலையை விடவில்லை. கொட்டி முடிந்த பின்பு அவன் தனது உகாதியை எடுத்துக் கொண்டு சம்மனம் போட்டு உட்கார்ந்தான். மெதுவாக அந்த உகாதியின் நரம்பை மீட்டி விட்டுக் கொண்டு பாட ஆரம்பித்தான். அம்மாதிரி யான இனிமையான சங்கீதத்தை அதற்கு முன்பு அவன் கேட்டது இல்லை. அதற்கு முன்பு அவனுடைய குரல் அவ் வளவு அழகாய் இருந்ததையும் அவன் கண்டதில்லை. அவன் பாடியபொழுது அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

மாகென்னா தன்னுடைய பாட்டைப் பாடி முடித்ததும் அங்கே ஒரு பிரமாதமான இடி முழக்கம் கேட்டது. ஒரு மின்னல் திடீரென்று தோன்றி அந்தக் கிராமத்தின் மீது வீசியது. மாகென்னா தன்னுடைய கண்கள் குருடாய் விடக்கூடாது என்பதற்காகக் கண்களை மூடிக்கொண்டான். அவற்றைத் திரும்ப அவன் திறந்தபோது அங்கிருந்த பாடோலியின் வெள்ளைத் தோலும் அதன் மீது குவிக்கப்

பட்டிருந்த சமைத்த மாமிசமும் காணப்படவில்லை. அவை இருந்த இடத்தில் இப்போது பாடோலி நின்று மெதுவாக அவனை வாழ்த்துவதுபோலக் கூவிக் கொண்டிருந்தது. மாகென்னு தன்னுடைய கைகளால் அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதான். என்றாலும் அன்று மாலை வேக மாகக் கழிந்து விட்டபடியால் இனியும் தாமதிக்கக் கூடாது என்று நினைத்தான்.

மாகென்னு சுற்றிப் பார்த்தபோது அந்தக் கிராமத்தி லுள்ள ஒவ்வொரு வீடும் தீப்பிடித்து எரிவதைப் பார்த் தான். அந்த மின்னல் பறவையினால் அந்த வீடுகள் எல் லாம் கொளுத்தப் பட்டிருந்தன. அந்த நெருப்பிலிருந்து கிளம்பிய புகை அந்த நீல வானத்திற்குக் கிளம்பிக் கொண் டிருந்தது. நரமாமிசப் பட்சிணிகளான அந்த வீரர்கள் அந்தப் புகையைக் கண்டு உடனே திரும்பலாமென்று அவன் நினைத்தான். ஆகவே வேகமாக அந்த மாட்டுத் தொழுவத் திற்குச் சென்று அதன் கதவைத் திறந்து விட்டான். அந்த மாட்டு மந்தைக்காக பாடோலி மெதுவாகக் கத்தியது. அதன் பின்னால் அந்த மாடுகள் எல்லாம் எவ்விதமான தயக்கமும் இல்லாமல் பாடோலியைப் பின்பற்றி வந்தன. மாகென்னு இன்னமும் பலவீனமாகவும் களைப்பாகவும் இருந்தபடியால் பாடோலியின் முதுகில் ஏறி உட்கார்ந்து கொண்டான். அந்தப் பிரும்மாண்டமான வெள்ளைக் காளை அந்த மனிதப் பட்சிணிகள் எத்திசையை நோக்கிப் போனார்களோ அத்திசைக்கு எதிரான திசையில் ஒருவரும் சொல்லாமலே புறப்பட்டுப் போக ஆரம்பித்தது. அந்தப் பள்ளத்தாக்கைக் கடந்து அவர்கள் போனார்கள்.

பாடோலி வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. மின்னல் பறவை அந்தக் கிராமத்தைத் தாக்கிய சில நிமிஷங்களுக்கு எல்லாம் பாடோலியும் மற்ற காளைகளும் காடுகளுக்குள் நுழைந்து விட்டன. சில காளைகள் அவர் களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தன.

அந்தப் பள்ளத்தாக்கின் மற்றொரு பக்கத்திலிருந்த அந்தக் கூட்டத்தின் தலைவன் கிராமத்தில் குடிசைகள் எரிந்து புகைந்து கொண்டிருந்ததைப் பார்த்தான். உடனே தன்னுடைய வீரர்களைப்பார்த்து அவன் கூச்சலிட்டான்.

"நாம் ஏமாந்தோம். நம்முடைய விரோதி மற்ருெரு பக்கத்திலிருந்து தாக்கி இருக்கிருன். நம்முடைய வீடுகள் எல்லாம் எரிந்து கொண்டிருக்கின்றன" என்று அவன் சொன்ஞன்.

எல்லோரையும் வேகமாக மீண்டும் கிராமத்திற்குத் திரும்பும்படி அவன் உத்தரவிட்டான். போகிற வழியில் எதிரிகள் மறைந்திருக்கலாம். ஆகையால் ஜாக்கிரதையாக இருக்கும்படியும் எச்சரிக்கை செய்தான்.

சூரியன் அஸ்தமனமாகிக் கொண்டிருந்தது. அச் சமயத்தில் அவர்கள் எல்லோரும் தங்கள் தீப்பிடித்த வீடுகளுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள். அங்கே அவர் கள் பார்த்தபோது அந்தக் கிழவன் வயிறு வீங்கி மாண்டு போய் கீழே படுத்திருந்ததைக் கண்டார்கள். அவனைச் சுற்றிப் பானைகள் எல்லாம் காலியாய் இருந்தன.

அந்தத் தலைவன் பெண்களையும், குழந்தைகளையும் அழைத்து என்ன நடந்தது என்று கேட்டான். ஆனல் அவர்களால் அதிகமாய் எதுவும் சொல்ல முடியவில்லை. திடீரென்று ஒரு பயங்கரமான இடி தோன்றியதாகவும், உடனே அவர்கள் பார்த்தபோது அந்தக் கிராமம் பூராவாக எரிந்து கொண்டிருந்ததாகவும் சொன்ஞர்கள். அவர்கள் தங்களுடைய தலைகளைப் பீதியினல் மறைத்து வைத்துக் கொண்டு இருந்ததாகவும் மறுபடியும் தைரியம் கொண்டு திரும்பிப் பார்த்த போது அந்தக் கிராமம் காலியாய் விட்டது என்றும் குடிசைகள் எல்லாம் எரிந்து கொண்டிருந்தன என்றும் மாட்டு மந்தைகள் எல்லாம் போய்விட்டதாகவும் அவர்கள் கூறினுர்கள்.

அந்த நர பட்சிணிகள் ஒரு யுத்தக் கவுன்ஸிலைக் கூட்டி யோசனை செய்தார்கள். வெகு நேரம் வாதித்த பின்பு கடைசி யாக அந்தக் கிராமத்தைக் கொள்ளையடித்தவர்களைப் பின்பற்றிச் செல்வது என்று முடிவு செய்தார்கள். அதாவது ஏதாவது சாப்பிட்ட பின்பு போவது என்று தீர்மானித்தார் கள். சாப்பாடு தயார் செய்யும்படிப் பெண்களுக்கு உத்தர விட்டு சாப்பிட்டு முடிந்ததும் எதிரிகளைப் பின் தொடர்ந்து போனுர்கள். ஆனல் அதற்குள் இரவு வெகு நேரமாகி விட்டது.

மாகென்னுவும் பாடோலியும் வேகமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அந்த நரபட்சிணிகளால் மெதுவாகத் தான் போக முடிந்தது. போகிற வழியில் என்ன ஆபத்து இருக்குமோ என்று அவர்கள் பயந்து கொண்டே போனுர்கள். தங்களுக்கு முன்பாக சில காவல்காரர்களே அனுப்பி முன் அரண் போல அவர்களே அமையும்படிச் செய்தார்கள். ஏதோ ஆயுதம் தரித்த ராணுவத்தைப் பின்பற்றிப் போவது போல அவர்கள் மனே ராஜ்யம் செய்தார்கள். ஒரு மாடு மேய்ப்பவனேயும் அவனுடைய மந்தைகளேயும் பின்பற்றிப் போவதாக அவர்கள் நினேக்கவில்லே.

மாகென்னு இன்னமும் களேப்படைந்தவனுய் இருந்தான். ஆகவே பாடோலி நடக்க ஆரம்பித்தவுடன் அவனுடைய தலேயை முன்னுல் தொங்க விட்டு பாடோலியின் பரந்த முதுகில் படுத்துத் தூங்கி விட்டான். இப்போது அவன் மிகுந்த மகிழ்ச்சியோடும் திருப்தியோடும் இருந்தான். பாடோலி உயிர் பெற்றுத் திரும்பியதுதான் அதற்குக் காரணம். தன்னுடைய உகாதியை ஜாக்கிரதையாக மஞ்சள் கம்பளத்தில் சுற்றி அதையும் தன்னுடைய மார்பின்கீழ் வைத்துக் கொண்டான். அவனுக்கு இரவு வெகு வேகமாகவும் வெகு மகிழ்ச்சியாகவும் இருப்பதாகத் தோன்றியது. பிரயாணத்தில் ஏற்பட்ட கஷ்டங்களே அவன் கொஞ்சம் கூட உணரவில்லே. பாடோலிக்கும், அந்த மாட்டு மந்தைகளுக்கும் அவைகள் நடந்து வந்த பாதைக்ள் வழுக்கலாகவும், கரடு முரடாகவும் இருந்ததாகத் தோன்றின. அதோடு இருட்டிலும் மெதுவாக ஜாக்கிரதையாக நடக்க வேண்டியதாய் இருந்தது.

பாடோலி அந்த வழியாக ஒரே ஒரு தடவை தான் வந்திருந்தபடியால் அந்தப் பாதையில் மீண்டும் போவது கஷ்டமாய்த்தான் இருந்தது. சூரியன் உதயமாகிற வெளிச்சம் மெதுவாக கிழக்கு வானத்தில் தோன்ற ஆரம்பித்தது. அச்சமயம் அவர்கள் காட்டிற்குள்ளிருந்து வெளியே வந்து கொண்டிருந்தார்கள். மீண்டும் அந்த உயரமான கரைகளே உடைய நதிக்கு அவர்கள் வந்து சேர்ந்தபோது அடிவானத்தில் சூரியன் மேலே கிளம்பி வந்து கொண்டிருந்தான். அந்த இடத்தில் பாடோலி நின்று பின்னுல் உள்ள மலேகளேப் பார்த்தது. அந்த காலேச் சூரியனின் கதிர்கள்

தங்களைப் பின் தொடர்ந்து வந்த அந்த நரபட்சிணிகளின் ஈட்டிகள் மீது ஒளித்தன. உடனே பாடோலியின் உடம்பு பயத்தினுல் பீடிக்கப்பட்டு உதறியது. ஒரு மாட்டுமந்தையை விட மனிதர்கள் வேகமாக ஓட முடியுமென்பதை அது அறிந்தது. அவர்கள் தங்களுடைய கிராமத்திற்குப் போய்ச் சேருவதற்கு முன்பாகப் பிடிபட்டு விடுவார்களோ என்று பயந்தது. மாகென்னு தூக்கத்திலிருந்து விழித்து தன்னைச் சுற்றிலும் பார்த்தான். முதலில் அவன் நதிக்கரைக்கு வந்ததாகக் கண்டு கொண்டான். பின்னுல் ஏதோ அபாயம் இருப்பது போல அவனுக்கு ஒரு உணர்ச்சி ஏற்பட்டது.

பாடோலி எத்திசையைப் பார்த்துக் கொண்டிருந்ததோ அத்திசையில் தன் பார்வையைத் திருப்பினுன். ஏனெனில், அச்சமயம் அந்த நரபட்சிணிகள் இந்த மாட்டு மந்தைகளை நதிக்கரையில் நின்றுகொண்டு இருப்பதைப் பார்த்தபடியால் ஒரு வெற்றிக் கூச்சல் போட்டார்கள். அந்தக் கூச்சலை அவன் கேட்டான். அந்தக் கூச்சல் ஒரு இடி முழக்கம் போல இருந்தது. அதே சமயத்தில் அவர்கள் பாறைச் சரிவில் இறங்கி ஓட ஆரம்பித்தார்கள். அவர்கள் மிகுந்த வேகமாக வந்தபடியால் அந்த மெதுவாகப் போய்க் கொண்டிருந்த மாட்டு மந்தையை வந்து பிடித்துக் கொள்வதற்கு அதிக நேரமாகாது.

மிகுந்த வருத்தத்தோடு மாகென்னு பாடோலியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு விம்மி விம்மி அழுதான்.

“ஓ பாடோலி, நாம் இப்போது என்ன செய்யப் போகிருேம்? நாம் இப்போது என்ன செய்யப் போகிருேம்? இந்தத் தடவை அவர்கள் நம்மைத் தப்ப விடமாட்டார்கள். உன்னையும் என்னையும் ஒரே சமயத்தில் கொன்று விடுவார்கள். அதன் பின்னுல் தான் அவர்கள் மாடுகளைப் பற்றிக் கொண்டு போவார்கள்.”

பாடோலி தயங்கி நிற்பதைப் போல அவனுக்குத் தோன்றியது. ஆனுல் உண்மையில் அது மேலே ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு நின்றது. அந்த நீல வானத்திலிருந்து ஏதோ ஒரு உதவி வருவதை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதைப் போலத் தோன்றியது. திடீரென்று ஏதோ ஒன்றை அவன் பார்த்தான். அவனுடைய நரம்புகள் எல்லாம் உடனே தளர்ந்தன. அந்த

மாட்டு மந்தை அந்த செங்குத்தான கரைவழியாக ஏறி ஆற்றுக்குள் ஓடியது. அது ஒரு காளையாக இல்லாமல் மனிதனாய் இருந்தால் அச்சமயத்தில் அது புன்னகை கொண்டிருக்கும்.

அவர்கள் தண்ணீருக்குள் இறங்கி அந்தத் தண்ணீரில் உழன்று கொண்டு அந்த நதியைக் கடந்து அக்கரைக்குப் போனார்கள். அச்சமயம் அந்த மலைகளிலிருந்து ஒரு பயங்கரமான சப்தம் கேட்டது. அது காதுக்கு நன்றாகக் கேட்கா விட்டாலும் அதனுடைய தொனி காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. மாகென்னு அதை உணர்ந்தான். தன்னை யறியாமலேயே அந்த மலைகளைப் பார்த்தான். தனக்கு மேலாக மேகங்கள் நீல நிறமான அந்த வானத்தில், ஆனால் அந்த மலைகளுக்கு வெகு தூரத்திற்கப்பால் உயரத்தில் ஒரு புகைக் கூட்டங்கள் போலத் தோன்றின. அவை மிகுந்த கறுப்பாக இருந்தபடியால் இதற்கு முன்னால் அவன் அந்த மாதிரி பார்த்ததே இல்லை. அதைப் பார்த்ததும் அவனுக்கு மனதில் உற்சாகம் தோன்றியது.

"அது மின்னல் பறவை" என்று அவன் மகிழ்ச்சிப் பெருக்கால் மெதுவாய்ப் பேசினான். பின்னால் அவனுடைய உள்ளம் சோர்வு அடைந்தது. ஏனெனில் அந்த மின்னல் பறவை கூட சீக்கிரமாக அங்கே வந்து சேர முடியாது. அந்த மனிதப் பட்சிணிகள் அவ்வளவு தூரம் நெருங்கி விட்டார்கள்.

பாடோலி அந்த மாட்டு மந்தையை ஆற்றைக் கடந்து அக்கரைக்கு அழைத்துக் கொண்டு போயிற்று. அங்கே ஒரு சிறிய குன்று இருந்தது. அந்தக் குன்றின் உச்சிக்கு அவை போனதும் பீதியுற்று கூட்டமாக நெருங்கி நின்றன. ஆனால் பாடோலி தன்னுடைய பழுப்பு நிறமான கண்களில் மலைகள் மீது இறங்கி ஓடி வரும் மனிதப் பட்சிணிகளை அமைதியோடு கவனித்துக் கொண்டிருந்தது.

மாகென்னு பாடோலியின் முதுகிலிருந்து கீழே நழுவி அதன் பக்கத்தில் பீதியினால் நடுங்கிக்கொண்டு நின்றான். அவனுடைய கண்கள் அந்த மலைகளுக்கு மேலாகக் காணப்படும் கறுப்பான புயல் மேகங்களிலிருந்து தனக்கு எதிராக ஓடிவரும் அந்தக் கறுப்பு மனிதர்களின் கூட்டத்தைப் பார்த்தான். அவனுக்குப் பயம் இருந்தபோதிலும்

அவனுடைய வாழ்க்கையில் இதுவரையில் இல்லாத பரபரப்பு தோன்றியது. ஏதோ ஒரு பிரும்மாண்டமான காரியம் நடக்கப் போவதாக அவன் உணர்ந்தான். ஒவ்வொரு தடவையும் அவன் அந்த மேகங்களைப் பார்க்கும்போதெல்லாம் அவை அவனுக்கு நெருங்கி வந்ததாகத் தோன்றியது. ஆனால் அவை அசைவதாகக் காணவில்லை. அந்த மேகத்திலிருந்து ஒரு மின்னலானது மீண்டும் மீண்டும் தோன்றிக்கொண்டே இருந்தது. இடியின் முழக்கம் தொடர்ச்சியாக ஆயிரம் யுத்தக் கொட்டுகளை அடிப்பதைப் போன்ற சப்தத்தைப் போலக் கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால் அந்தப் புயல் மேகங்கள் மட்டும் மலைகளுக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்தனவே ஒழிய நெருங்கி வரவில்லை.

கடைசியாக அந்த மனிதப் பட்சிணிகள் நதியின் அக்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். பாடோலி நிற்கிற இடத்திலிருந்து அவர்கள் 200 கெஜ தூரத்தில் வந்து விட்டார்கள். அங்கே அவர்கள் நின்று மூச்சு வாங்கினார்கள். சுமார் 200 பேர்கள் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள். அதிலிருந்தவர்கள் எல்லோரும் கூச்சலிட்டுக் கொண்டும் மகிழ்ச்சியினால் குதித்துக்கொண்டும் இருந்தார்கள். அது ஒரு விசித்திரமான, ஆச்சரியமான காட்சியாய் இருந்தது. தன்னுடைய விதி அதில் தொங்கிக் கொண்டிருக்கிறது என்ற பீதியில்லாமல் இருந்தால் அந்தக் கூட்டத்தின் அழகைப் பார்த்து மாகென்னு மகிழ்ச்சியடைந்து இருப்பான். அவர்களின் கண்களில் உள்ள வெள்ளைகளை அவனால் பார்க்க முடிந்தது. அவர்களுடைய முகங்களில் ஏற்படும் தோற்றங்களின் மாறுதல்களையும் அவனால் கவனிக்க முடிந்தது. அவர்கள் மூச்சு விட்டுக்கொண்டிருப்பதையும் அவனால் கேட்க முடிந்தது. அவர்கள் சமீபத்தில் வந்திருப்பதைப் போன்ற ஒரு உணர்ச்சியும் அவனுக்குத் தோன்றியது. வீரர்களின் மணம் அவனை நெருங்கியது. உடனே அவனுடைய முதுகெலும்பு வழியாக ஒரு நடுக்கம் கீழே இறங்கியதாக அவன் உணர்ந்தான். அவனுடைய உடம்பில் ஏற்பட்ட காயங்கள் இப்போது வலி கொடுக்க ஆரம்பித்து அவன் உடம்பு நடுங்க ஆரம்பித்தது. அவனுடைய இரத்த ஓட்டம் அதிகமாயிற்று. இப்போது அவனுக்கு அவனுடைய மாட்டுமந்தை போனமாதிரி

நிலைமை ஏற்பட்டது. நம்பிக்கையென்பது கொஞ்சமும் இல்லாத நிலைமை ஏற்பட்டது. அந்த மின்னல் பறவையால் கூட அவர்களை இப்போது காப்பாற்ற முடியாது.

அந்த மனிதப் பட்சிணிகள் கூச்சலிட்டுக்கொண்டும் குதித்துக்கொண்டும் பரபரப்போடும், வெற்றியோடும் காணப்பட்டார்கள். அவர்களின் தலைவன் மட்டும் மௌனமாய் இருந்தான். அவனுடைய கூர்மையான கண்கள் அங்கிருந்த ஒவ்வொரு அடி நிலத்தையும், அங்கிருந்த புதர்களையும் கவனித்துப் பார்த்தன. கடைசியாக அவன் பாடோலியைப் பார்த்தான்.

ஒரு வெள்ளைக்காளை இறந்து போயிற்று. இப்போது இங்கே மற்றொன்று இருக்கிறது. யாரோ ஒருவர் அதை அவனுக்குக் கொண்டு வந்து கொடுத்திருக்க வேண்டும். ஆகவே அவனைக் காப்பாற்ற வந்த கூட்டம் இங்கே எங்கேயோ தான் இருக்க வேண்டும் என்று அவன் நினைத்தான். அவன் எவ்வளவுதான் அங்கே தன்னுடைய கண்களால் தேடிப் பார்த்தாலும் ஒன்றையும் , அவனால் பார்க்க முடியவில்லை. ஆனால் அந்தக் குன்றின் மேலாக நின்ற அந்தக் கூட்டம் ஒன்று தான் அவன் கண்களுக்குத் தோன்றியது. மீண்டும் மீண்டும் அவனுடைய சிந்தனைகள் பாடோலியிடம் திரும்பி வந்தன. "அந்த வெள்ளைக்காளை— அந்த வெள்ளைக்காளை அது எங்கே இருந்து வந்தது?"

அவன் தன்னுடைய வீரர்களை முன்னால் போகாமல் தடுப்பதற்காகத் தன் கைகளால் சைகை காட்டி ஆழ்ந்து யோசனை செய்தான். என்றாலும் அந்தக் குன்றின் உச்சியில் நின்று கொண்டிருந்த அந்தச் சிறு கூட்டம் அவனுடைய வீரர்களைத் தூண்டிவிட்டு அவர்களுடைய உற்சாகம் எல்லை கடந்து போகும்படிச் செய்தது. கடைசியில் அவன் அங்கிருந்த உற்சாகத்தினால் கவரப் பட்டான். கடைசியாக ஜாக்கிரதை என்பதைக் காற்றில் விட்டு விட்டு ஒரு பிரும்மாண்டமான கூச்சல் போட்டு தன் கையில் வைத்திருந்த கேடயத்தை ஆட்டி ஈட்டியைத் தலைக்கு மேலாகத் தூக்கி அந்த ஆற்றின் செங்குத்தான கரையில் இறங்கி ஓடினான். அங்கிருந்து பாறைக்குப் பாறை ஒரு மானைப் போல தாவி ஓடி, அந்த மனிதப் பட்சிணிகள் அவனுக்குப் பின்னால்

ஆடிக் கொண்டும் ஓடிக்கொண்டும் கூட்டமாகப் போனார்கள். அவர்கள் காட்டு நாய்களைப் போல ஊளையிட்டுக் கொண்டு போனார்கள்.

மாகென்னா பாடோலியைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். அவனுடைய பீதியுற்ற கண்கள் அந்தத் தண்ணீரில் வந்து கொண்டிருந்த கூட்டத்தின் மேல் குத்திட்டு நின்றன. அவர்கள் ஓடிவரும் வேகத்தில் அங்கிருந்த கற்கள் எல்லாம் நழுவி கீழே புரண்டு ஓடின. திடீரென்று அந்த மனிதப் பட்சிணிகளின் கூக்குரலுக்கு மேலாக ஒரு பயங்கரமான உறுமல் கேட்டது. அந்த உறுமல் வர வர அதிகமாகி ஒவ்வொரு வினாடியும் கிட்டே நெருங்கிக் கொண்டிருந்தது. முதலில் மலைகளுக்கு மேலாக அவன் பார்த்தது அந்தப் புயல் மேகங்களாய் இருக்கலாம் என்று அவன் நினைத்தான். ஆனால் அப்பக்கமாக அவன் நோக்கியபோது அந்த மேகங்கள் மறைந்து போயின. ஆனால் அந்த உறுமல் வரவர அதிகமாகி, அவன் நின்று கொண்டிருந்த பூமி கூட அதிர்ந்தது. கடைசியாக அது என்ன விஷயம் என்பது அவனுக்குப் புரிந்தது. அதாவது அந்த ஆற்றில் ஒரு பெரிய வெள்ளம் வந்து கொண்டிருந்தது. அந்த மனிதப் பட்சிணிகள் அந்த ஆற்றின் நடுவில் வந்து கொண்டிருந்த போதுதான் அந்தச் சப்தத்தைக் கேட்டார்கள். ஒரு வினாடி அவர்கள் தயங்கி யோசித்தார்கள். அவர்கள் மீண்டும் ஒரு மனிதனைப்போல ஒரே முகமாக அந்த ஆற்றின் வளைவை நோக்கிப் பார்த்தார்கள். அந்த வளைவு அவர்கள் நின்ற இடத்திலிருந்து 50 அடி தூரத்தில் இருந்தது. அந்தச் சமயத்தில் 20 அடி உயரத்தில் அந்த ஆற்றில் ஒரு வெள்ளம் அந்த வளைவைச் சுற்றி அவர்களை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தது. ஒரு வினாடி அவர்கள் பீதியோடு தயங்கினார்கள். அவர்கள் எவ்வளவு கூச்சல் போட்டார்களோ அவ்வளவுக்கவ்வளவு மௌனமாக இருந்தார்கள். ஆனால் அந்தத் தண்ணீர் முழங்கிக் கொண்டும், உறுமிக் கொண்டும் அவர்களைப் பார்த்து ஓடி வந்து கொண்டிருந்தது. அந்த வெள்ளம் தன்னோடு மரங்களையும், கிளைகளையும், புதர்களையும் அடித்துக் கொண்டு வந்தது. திடீரென்று அவர்கள் கரையை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள். ஆனால் அதனால் பிரயோஜனமில்லை.

முட்டளவு தண்ணீரில் அவர்கள் நடக்க வேண்டியிருந்த படியால் கீழே கிடந்த கற்களில் அவர்களுடைய கால்கள் வழுக்கின. ஒருவர் மீது ஒருவர் விழுந்தார்கள். கடைசியாக அவர்கள் அடித்துக் கொண்டு போகப்பட்டார்கள்.

அந்தத் தண்ணீரின் பெரிய சுவரானது அவர்கள் மீது சொல்ல முடியாத சப்தத்தோடு வீழ்ந்து அமிழ்த்தியது. அவர்கள் அடித்துக்கொண்டு போகப்பட்டார்கள். அப்படிப் போகும்போது அவர்களுடைய உயிரும் போய் விட்டது. அந்தக் கறுப்பு உடல்கள் வெள்ளத்தின் வேகத்தில் இங்குமங்கும் காற்றில் தூக்கி வீசப்பட்டன. ஒரு பூனை ஒரு எலியை எப்படி இங்குமங்கும் தூக்கிப் போடுமோ அதே மாதிரி அவர்கள் அந்தத் தண்ணீரில் அகப்பட்டுத் தவித்தார்கள். சில வினாடிகளில் எல்லாம் முடிந்து விட்டது. அவர்களில் ஒருவர் கூட அந்தச் செய்தியைத் தங்கள் கிராமத்திலுள்ள பெண்களுக்குச் சொல்வதற்காகத் தப்பவில்லை. அந்தக் கிராமத்தில் பெண்கள் எரிந்துபோன குடிசைகளில் அவர்களின் வருகைக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மாகென்னுவினால் மூச்சுகூடவிட முடியவில்லை.

"அதுதான் மின்னல் பறவை" என்று அவன் பாடோலியிடம் மெதுவாகச் சொல்லிவிட்டுத் தன்னை அறியாமல் மேலே உள்ள மேகம் இல்லாத வானத்தைப் பார்த்தான். மேலே உயரத்தில் தன்னுடைய இறக்கைகளை விரித்துக்கொண்டு அந்த பெரிய பறவை பறப்பதைக் கண்டான். அது அங்கு நின்று கொண்டிருந்த குன்றைச் சுற்றி வந்தது. அது திரும்பியபோது சூரியன் அதனுடைய மார்பில் பிரகாசத்தோடு தெரிந்தது. அதனுடைய மார்பும் இறக்கைகளும் சிவப்பு நிறமாய் இருந்தது. ஒரு நெருப்பு ஜ்வாலை எப்படி யிருக்குமோ அதே மாதிரி ஊடுருவிப் பார்க்கக் கூடியதாய் காணப்பட்டது.

"அதுதான் மின்னல் பறவை" என்று மீண்டும் மெதுவாய்ச் சொன்னான். அவன் தன்னுடைய கையை ஆட்டி புன்னகை கொண்டான். அவனுடைய கண்களிலிருந்து நன்றிக் கண்ணீர் வெளிப்பட்டு கன்னங்களில் வழிந்தோடியது. அவனுடைய வெள்ளைப்பற்கள் சூரியனுடைய

பிரகாசத்திஞல் மின்னின. அந்தப் பெரிய பறவை ஆற்றின் வழியாக பறந்து போயிற்று. அது அந்தக் குளத்தில் போய் முங்கிவிட்டு வரும் என்பதை மாகென்ஞ அறிந்திருந்தான். ஆகவே அதற்கு வழியனுப்புவதற்காக அவன் கையை ஆட்டிஞன்.

மாகென்ஞ மீண்டும் தன் முதுகில் ஏறி அமர்கிற வரையில் பாடோலி அசையவில்லே. அதன் பின்ஞல் அது வீட்டை நோக்கித் திரும்பியது. மற்ற காளேகளே தன் பின்ஞல் வரும்படி மெதுவாகக் கத்தியது. அச்சமயம் அவர்களுடைய காட்சி மிகவும் இனிமையாய் இருந்தது. மரங்களுக்கும், ஆற்றின் கரைகளுக்கும் மத்தியில் அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். அந்தப் பெரிய கொம்பு இல்லாத வெள்ளேக் காளே தன் மீது ஒரு பிரகாசமான மஞ்சள் கம்பளியால் போர்த்தப்பட்டு போய்க் கொண் டிருந்தது. பையன் அதன் மீது அமர்ந்து ஒரு உகாதியை வாசித்துப் பாடிக் கொண்டிருந்தான். அவர்களின் பின்ஞல் பற்பல விதமான நிறங்களில் உள்ள மாடுகள் எல்லாம் பணிவோடு வந்து கொண்டிருந்தன. மாகென்ஞ தன்னுடைய கண்களே ஆகாயத்தில் திறந்து அந்தச் சிறிய புள்ளி மீது பதித்தான். அதுதான் அவனுடைய நண் பஞன மின்னல் பறவை. அதற்காக அவன் பாடிஞன்.

மேல் வானத்தினின்று சூரியன் கீழே வந்து விட்டான். அச்சமயத்தில் அவர்கள் எல்லோரும் மாகென்ஞவின் கிரா மத்திற்கு வந்து சேர்ந்தார்கள். சில குழந்தைகள் அங்கே புதருக்குப் பக்கத்தில் விளேயாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள்தான் முதலில் மாகென்ஞவின் கூட்டத்தைப் பார்த்தார்கள். அவர்கள் பீதியால் பயந்து தங்களுடைய பெற்ருேர்களிடம் மாகென்ஞவின் பிசாசும் பாடோலியின் பிசாசும் இறந்துபோன மாட்டு மந்தைகளின் பிசாசுகளும் கிராமத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன என்று கூறுவதற்காக ஓடிஞர்கள். அந்தச் செய்தி காற்றைப் போல வெகு விரைவாக அந்தக் கிராமத்தில் பரவியது. அங்கிருந்த ஒவ்வொரு வீரனும் பக்கத்து கிராமங்களில் உள்ள வீரர்களும் மாகென்ஞவின் தந்தையும் ஒன்று கூடிஞர்கள். அவர்கள் எல்லோரும் ஆயுதங்களே எடுத்துக் கொண்டு அந்தச் சிறிய ஊர்வலத்தைச் சந்திப்பதற்காகப்

போனார்கள். மாகென்னா பாடோலியின் மீது அமர்ந்து வந்ததைப் பார்த்தபோது அவர்கள் நின்று தங்களுடைய ஈட்டிகளை ஆட்டிக்கொண்டு மாகென்னாவைப் பார்த்துக் கூச்சலிட்டார்கள்.

“ அங்கேயே நில் பிசாசே. இதை விட்டுப் போய் விடு. எங்களைத் தொந்தரவு செய்யாதே, நீங்கள் ஏன் இங்கே வரவேண்டும்? நீ உன்னைக் கொலை செய்த ஆட்களைப்போய் தொந்தரவு செய் ” என்று சொன்னார்கள்.

பாடோலி நின்றது. மாகென்னா சிரித்துக் கொண்டு தனது தந்தையைச் சந்திப்பதற்காக முன்னால் வந்தான்.

“ நான் பிசாசு அல்ல தந்தையே. இங்கே பாரும் என்னுடைய காயங்களிலிருந்து வந்த ரத்தம் காய்ந்து போய் இருக்கிறது. அந்த மனிதப் பட்சிணிகள் தான் இந்தக் காயங்களை உண்டு பண்ணினார்கள். இதோ பாரும் என்னுடைய உகாதி. இதோ பாரும் நான் உமக்கு வாசித்துக் காட்டுகிறேன். உமக்கு என்னுடைய குரல் நன்றாய்த் தெரியும் ” என்று அவன் கூச்சலிட்டான்.

அவன் அவர்களுக்குப் பாடிக் காட்டியும் உகாதியை வாசித்துக் காட்டியும் அவனுடைய தந்தையை இணங்கும் படிச் செய்வதற்கு வெகு நேரம் ஆயிற்று. கடைசியில் தன்னுடைய பையன்தான் இப்போது க்ஷேமமாய்த் திரும்பி வந்திருக்கிறான் என்பதை அவனுடைய தந்தை ஒப்புக் கொண்டார்.

கடைசியாக அவரும் மற்ற கூட்டத்தாரும் அவனை நம்பினார்கள். அதன் பின்னால் அது வரை கொடுக்கப் பட்டிராத வரவேற்புகள் அவனுக்குக் கொடுக்கப்பட்டன. கூட்டத்தின் தலைவன் மாகென்னாவை அழைத்து அவனு டைய கதை முழுவதையும் சொல்லும்படிக் கேட்டான். மாகென்னா அந்தக் கதைகளைத் திரும்பத் திரும்ப தன்னிடம் கேட்கிற ஒவ்வொருவரிடமும் சொல்லி வந்தான். அவன் அந்தக் கதையை பாட்டுகள் மூலமாகவும் வசனங்கள் மூலமாகவும் சொல்லி வந்தான். ஆனால் அதைக் கேட்ட ஒருவர்கூட சலித்துப்போனதாகக் காணப்படவில்லை.

மாகென்ன வளர்ந்து பெரியவன் ஆனன். அதன் பின்னல் அந்தக் கூட்டத்தின் தலைவன் அவனைத் தனக்கு மந்திரிகளில் ஒருவனாக நியமித்துக் கொண்டான். மாகென்ன பின்னல் பெரிய பணக்காரனாகவும் ஏராளமாக மாட்டு மந்தை வைத்திருப்பவனாகவும் விளங்கினன். அவன் பல மனைவிகளை விவாகம் செய்து கொண்டு ஏராளமான குழந்தைகளைப் பெற்றன். ஆனல் அவன் பக்கத்தில் எப்போதும் பாடோலி என்ற காளை இருந்து கொண்டேயிருக்கும். அவன் தன்னுடைய உகாதியைத் தன்னுடன் எப்போதும் வைத்துக் கொண்டிருப்பான். அவனைப் போல வேறு யாராலும் பாட முடியாது. அவனைப் போல அந்த உகாதியை வாசிக்கவும் முடியாது.

பாடோலி வயதானதாகவே காணப்படவில்லை. அதை எல்லோரும் எங்கு சென்ற போதிலும் வரவேற்பார்கள். பாடோலி தன்னுடைய நண்பனும் எஜமானனுமான மாகென்ன கூடத்தான் போய்க்கொண்டிருக்கும். அந்த இருவரும் ஒருவரையொருவர் நன்ருய் அறிவார்கள். அந்த இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிவது அபூர்வம்.

கடைசியாக மாகென்ன மிகுந்த வயது ஆன பின்பு ஒரு நாள் இறந்து போனன். அவனுடைய குழந்தைகள் அவனுடைய குடிசையிலிருந்து வெளியே வந்து அவன் இறந்து போனதாய் அறிவித்தார்கள். பாடோலி அந்தக் குடிசையின் வாசலுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு இருந்தது. அவர்களைப் பாடோலி பார்த்ததும் தன்னுடைய தலையைப் பின்னல் தள்ளி ஒரு விசித்திரமான கூச்சல் போட்டது. அந்த மாதிரி கூச்சலை அவர்கள் வெகு நேரம் கேட்கவே இல்லை. அந்தக் கூச்சல் பரலோகத்திற்குச் சென்றது. அங்கிருந்த மலைகளில் எதிரொலித்தது. பல மைல்களுக்கு அப்புறம் அந்தக் கூச்சலைக் கேட்டதாகச் சொன்னர்கள். பின்னல் பாடோலி திரும்பி வெறுப்போடு தன் தலையைத் தொங்க விட்டு மெதுவாக அந்தப் பெரிய குளத்திற்குச் சென்றது. அங்கிருந்துதான் அது முன்னல் வந்தது. அந்தக் கரைக்கு அது சென்றதும் மீண்டும் ஒரு முறை அது கூச்சலிட்டது. அதன் பின்னல் அந்தக் குளத்துக்குள் அது இறங்கி நடந்தது. அங்கிருந்த தண்ணீர் அதை மூடி விட்டது.

இவையெல்லாம் பல பல வருஷங்களுக்கு முன்னால் நடந்தவை. அமாக்சோசா என்பவர்களை மனிதப்பட்சிணிகள் விரட்டியடிப்பதற்கு முன்பாக இங்கே இவை நடந்தன. இப்போது வடகிழக்குக் கேப் மாகாணத்தில் அவர்கள் குடியேறி வசிக்க ஆரம்பிப்பதற்கு முன்பாக இவை நடந்தன. இப்போது அந்தப் பள்ளத்தாக்கில் வசித்து வரும் மக்களிடம் போய் மாகென்னுவைப் பற்றி யாராவது கேட்டால் சில சமயங்களில் அந்தக் கதையைச் சொல்வார்கள். அந்தப் பயங்கரமான இடி ஏற்பட்டதையும் அந்தப் புதர்களுக்கு மேலாக பனி தொங்கிக் கொண்டிருந்ததையும் அந்த மரங்களுக்கு இடையிலும் சங்கீதம் கேட்டுக் கொண்டிருந்ததையும் ஒருவன் பாடிக் கொண்டிருந்ததையும் அவர்கள் சொல்லுவார்கள். கடைசியாக அந்தக் குளத்தில் அந்தப் பிரும்மாண்டமான கொம்புகள் இல்லாத வெள்ளைக் காளை இறங்கி நடந்து போனது என்றும் தண்ணீர் அதை மூடி விட்டது என்றும் அவர்கள் சொல்வார்கள்! இப்போதும் கூட மாகென்னுவும் அந்தக் காளை மாடும் சேர்ந்து உலாவிவருவதாகவும், இப்போதும் கூட அந்த மின்னல் பறவை மாகென்னுவின் பாட்டுகளைக் கவனித்துக் கேட்பதாகவும் அவர்கள் சொல்வார்கள்.

★

104355
EGMORE, MADRAS
06, 3, 68
3A
8.74